)தலைப்பு 232 - சிறைச்சாலைகள் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 232 - சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஆகஸ்ட் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் சிறைச்சாலைகள் திணைக்களம், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை சிறைச்சாலைகள் திணைக்களம், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) வைப்புக்கள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய வைப்புக் கொடுப்பனவுகள் மற்றும் மீதிகளை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடு அவதானிக்கப்பட்டது.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதிக்கூற்றின் ஏசீஏ - 4 படிவத்தின்படி, 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று, 08 பொது வைப்புக் கணக்குகளின் திணைக்களப் பதிவேடுகளின்படி உள்ள மீதிக்கும் திறைசேரிப் பதிவேடுகளின்படி உள்ள மீதிக்கும் இடையில் ரூபா 16,078,508 வித்தியாசம் உள்ளது.	அனைத்து வைப்புக் கணக்குகளுக்கும் தொடர்பான மீதி வேறுபாட்டைக் கண்டறிந்து அதைச் சரி செய்வதற்காக 2024 நவம்பர் 20 ஆம் திகதியிடப்பட்ட மாற்றுப்பத்திரம் ஒன்று அரச கணக்கீட்டுத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், கடந்த திறைசேரி அச்சுப் பிரதி மற்றும் திணைக்கள ஏடுகளுடன் வைப்புக் கணக்குகளை வேறு வேறாக ஒப்பிட்டு அவற்றின் மீதி வேறுபாட்டிற்கான காரணங்களை இனங்கண்டு அதற்கமைய சரி செய்தல்	சரியான வைப்புக் கணக்கு மீதிகள் நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

வேண்டும் என இலக்கம் SA/APM/01/01/32-232 கொண்டதும் 2024 திசெம்பர் 04 ஆந் திகதியிடப்பட்ட கடிதத்தில் அரச கணக்கீட்டுத் திணைக்களத்தினால் அறிவுரை வழய்கப்பட்டுள்ளது. அதற்கமைய விரைவில் திருத்தப் பணிகளை மேற்கொள்வதாக அறிவிக்கிறேன்.

(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(i)	மீளாய்வாண்டில் சிறைச்சாலை நிறுவனங்களில் காணப்படும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிகாஸ் கணக்கு முறைமையில் உள்ளடக்கப்படாத 48 வாகனங்களில் 30 வாகனங்களின் காப்புறுதியின்படி மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூா 89,680,000 ஆக உள்ளதுடன், அந்த 48 வாகனங்களில் 35 வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், 09 வாகனங்களை ஓட்டத்திலிருந்து நிறுத்துவதற்கும், 02 வாகனங்களைத் திருத்த வேலைகளுக்கு அனுப்புவதற்கும், 01 வாகனத்தினை தற்காலிகமாக மாற்றுவதற்கும் மற்றும் 01 வாகனத்தினை அகற்றுவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.	சிகாஸ் முறைமையில் உள்ளடக்கப்படாத 48 வாகனங்களையும் சிகாஸ் முறைமையில் உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கிறேன்.	திணைக்களத்துக்குச் சொந்தமான அனைத்துச் சொத்துக்களையும் சரியாக அடையாளம் கண்டு சிகாஸ் வேலைத் திட்டத்தின் மூலம் கணக்கில் கொள்ள வேண்டும்.

(ii)	முன்னைய ஆண்டில் (2023) திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி அல்லாத சொத்து மீதி ரூபா 11,189,480,019 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டில் (2024) நிதிக் கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஏசீஏ - 6 படிவத்திற்கு (எஸ்ஏ – 82) அமைய நிதியல்லாத சொத்துக்களின் 2024 ஜனவரி 01 ஆம் திகதியில் ஆரம்ப மீதி ரூபா 10,049,873,117 ஆக இருந்ததனால் ஆரம்ப மீதிகள் இடையே ரூபா 1,139,606,902 குறைவொன்று காட்டப்பட்டதன் மூலம் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் சிறைச்சாலை திணைக்களத்தின் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நிதியல்லாத சொத்துக்கள் அந்தத் தொகையினால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	அரச கணக்குகள் திணைக்களத்துடன் இணைந்து விரைவில் சரிசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கிறேன்.	முன்னைய ஆண்டில் நிதி அல்லாத சொத்துக்களில் ஏசீஏ - 6 படிவத்தில் இறுதி மீதி மற்றும் மீளாய்வாண்டில் ஏசீஏ - 6 படிவத்தில் நிதி அல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதி என்பன நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள மீதியுடன் ஒத்திருத்தல் வேண்டும்.
(iii)	2024 திசெம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமை தொடர்பான கூற்றில் எஸ்ஏ - 82 (ஏசீஏ - 6) படிவத்தின் படி நிதியல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதி ரூபா 10,049,873,117 ஆக இருந்த போதிலும், திணைக்களத்தின் சிகாஸ் வேலைத் திட்டத்தின்படி சமர்ப்பிக்கப்பட்ட படிவத்தில் 2024 ஜனவரி 01 ஆந் திகதியில் நிதியல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதி ரூபா 11,037,818,117 ஆக இருந்ததனால் ஆரம்ப மீதிகள் இடையில்	அந்தக் குறைபாட்டை விரைவில் அரச கணக்குகள் திணைக்களத்துடன் இணைந்து சரிசெய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள நிதியல்லாச் சொத்துக்களின் மீதி திணைக்களத்தின் சிகாஸ் வேலைத் திட்டத்துடன் சமமாக இருக்க வேண்டும்.

	ரூபா 987,945,000 ஆன வேறுபாடு காணப்பட்டது.		
(iv)	2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் உள்ள எஸ்ஏ - 82 படிவத்திற்மைய நிதி அல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதிகளில் (ஏசிஏ – 6) செய்யப்பட்ட சேர்க்கைகள் மற்றும் திணைக்கள சிகாஸ் வேலைத் திட்டத்திற்கமைய நிதி அல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதிகளில் செய்யப்பட்ட சேர்க்கைகள் என்பவற்றுக்கு இடையே ரூபா 987,945,000 வித்தியாசம் காணப்பட்டது.	அந்தக் குறைபாட்டை விரைவில் அரச கணக்குகள் திணைக்களத்துடன் இணைந்து சரிசெய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.	2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் உள்ள எஸ்ஏ - 82 படிவத்திற்மைய நிதி அல்லாத சொத்துக்கள் சிகாஸ் வேலைத் திட்டத்துடன் ஒத்திருத்தல் வேண்டும்.
(v)	நிதிக்கூற்றுக்களில் உள்ள ஏசிஏ - 6 படிவத்தில் (எஸ்ஏ - 82), செலவினத் தலைப்பு இலக்கம் 9151-1-1 இன் கீழ் "House Boats" என ரூபா 537,403 ஆரம்ப மீதியொன்று குறிப்பிடப்பட்டிருந்ததுடன், இது தவறுதலாகச் சேர்க்கப்பட்ட ஒரு பெறுமதியாகும்.	மட்டக்களப்புச் சிறைச்சாலையால் அலுவலக உபகரணங்களின் கீழ் குறிப்பிடப்பட வேண்டிய ரூபா 537,403 ஆரம்ப மீதி தவறுதலாக 9151-1-1 இன் கீழ் "House Boats" என்று பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அதைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கிறேன்.	சரியான மீதிகளைள நிதிநிலை அறிக்கைகளில் உள்ளடக்கி சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(vi)	சிறைச்சாலை நிறுவனங்களில் உள்ள தாவரங்களின் (தென்னை, இளநீர், பலா போன்ற) பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு, நிதிக் கூற்றுக்களில் நிதியல்லா உயிரியல் சொத்துக்களாக அடையாளம் காணப்படவில்லை.	சிறைச்சாலை நிறுவனங்களுக்குச் சொந்தமான அனைத்து மரங்கள் மற்றும் விலங்குகளின் பெறுமதியை மதிப்பீடு செய்து சிகாஸ் முறைமையில் உள்ளடக்க உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கிறேன்.	சிறைச்சாலைகளுக்குச் சொந்தமான உயிரியல் சொத்துக்களின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் சரியாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

(vii)	நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏசிஏ - 6 படிவத்தில் (எஸ்ஏ - 82), செலவின தலைப்பு இலக்கம் 9152-2-1 இன் கீழ் ரூபா 909,739,254 இறுதி மீதியொன்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதில் சிறைச்சாலை திணைக்களத்தால் ஏற்கனவே அகற்றப்பட்ட ரூபா 5,225,000 மதிப்புள்ள 6 வாகனங்களின் கிரயமும் உள்ளடக்கப்பட்டிருந்தது.	சிகாஸ் கட்டமைப்பைச் சரிபார்த்து, இந்த மாத கணக்குகளின் பொழிப்பின் மூலம் அந்த வாகனங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கிறேன்.	சொத்து மீதிகளை சரியாகச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(viii)	சிறைச்சாலை திணைக்களத்தில் உள்ள துப்பாக்கிகள், தொலைபேசி சமிக்ஞை தடை செய்யும் (Jammer) கட்டமைப்பின் கிரயம் மற்றும் ரூபா 40,162,968 செலவில் 23 சிறைச்சாலை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட LGN கட்டமைப்பு ஆகியவை மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமை பற்றிய அறிக்கையின் கீழ் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் அடையாளம் காணப்படாததால், அந்த பெறுமதியினால் குறைத்துக் கணக்கிடப்பட்டிருந்தது.	சிறைச்சாலை திணைக்களத்தின் துப்பாக்கிகள் மற்றும் Jammer ஒங்கமைப்புகள் மதிப்பீடு செய்யப்படவில்லை என்பதுடன், அவற்றை மதிப்பீடு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, சிகாஸ் ஒழுங்கமைப்பில் சேர்க்கப்படும். அத்துடன், LGN கட்டமைப்பின் மதிப்பை விரைவில் சிகாஸ் கட்டமைப்பில் சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தயவுசெய்து அறிவிக்கிறேன்.	சொத்து மீதியை சரியாகச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ix)	13 சிறைச்சாலை நிறுவனங்களுக்குச் சொந்தமான 166.7730 ஏக்கர் நிலத்தின் உரிமை சிறைச்சாலை திணைக்களத்திடம் இருந்தபோதிலும், அதன் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாததால் கணக்கில் கொள்ளப்படாததனால், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி அன்று சிறைச்சாலை திணைக்களத்தின் தேறிய சொத்துக்கள் அந்தக் காணியின் பெறுமதிக்குச் சமமான அளவில் குறைத்துக் கணக்கிடப்பட்டிருந்தன.	சிறைச்சாலை நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளில் 13 காணிகளின் 166.7730 ஏக்கர் காணியின் பெறுமதியை மதிப்பீட்டுத் திணைக்களத்துடன் இணைந்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், குறித்த மதிப்பீட்டு பெறுமதிகள் கிடைத்தவுடன் கணக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	சிறைச்சாலை திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(இ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் தொழில்நுட்ப மற்றும் விவசாய முற்பணக் கணக்கில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ரூபா 170,560,476 பெறப்பட வேண்டிய மீதியில், ரூபா 105,181,396 மீதியை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.	இந்த அறவிடப்பட வேண்டிய மீதியான தொகையான ரூபா 170,560,476 ஆனது, 1982 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய பெற வேண்டிய தொகையாகும். அதில், 2019 - 2024 வரையான அறவிடப்பட வேண்டிய மீதிகள் குறித்த விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், 1982 முதல் 2015 வரையான இலாபமாக அறவிடப்பட வேண்டிய மிகுதித் தொகை குறித்த விபரங்களைச் சமர்ப்பிப்பதற்குப் போதுமான தகவல்கள் இல்லை.	முழுமையான கடன் பட்டேபரின் மீதியை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன என்பதற்கு,

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

கடந்த வருடத்திற்குரிய அறிக்கையின் பந்திக்கான தொடர்பு	நடைமுறைப்படுத்தப்படாத பரிந்துரைகள்	இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு
• 1.6.1 (ஈ)	முந்தைய ஆண்டின் நிதி அல்லாத சொத்துக்களின் இறுதி மீதிக்கும், மீளாய்வாண்டின் நிதி அல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதிக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகிறது.	1.6.1 (ஆ)

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	05 மூலதனச் செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 865,000,000 மதிப்பீட்டு ஒதுக்கீடுகளில், 47 சதவீதத்துக்கும் அதிகமாக, அதாவது ரூபா 404,185,237 மீதமாக இருந்ததுடன், ஒவ்வொரு செலவின விடயங்களினதும் சேமிப்பானது 12 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.	ஒதுக்கீடுகள் சேமிக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வதுடன், குறித்த செலவின விடயங்களின் கீழ் சேமிப்புகளுக்கான காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.	நிதிப் பிரமாணம் 50 இற்கு அமைய வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும்.

(ஆ)	02 மூலதனச் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 150,000,000 ஒதுக்கீடுகளில், நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் ரூபா 38,000,000 வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்ட பின்னர் ரூபா 66,301,574 மீதமாக இருந்ததுடன், அந்த செலவின விடயங்களின் தேறிய ஏற்பாட்டின் அடிப்படையில் இன்னமும் சேமிப்புகள் 39 சதவீதம் முதல் 74 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டன.	ஒதுக்கீடுகள் சேமிக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வதுடன், குறித்த செலவின விடயங்களின் கீழ் சேமிப்புகளுக்கான காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.	நிதிப் பிரமாணம் 50 இற்கு அமைய வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும்.
(இ)	02 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 6,250,000,000 மொத்த ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடுகள் மூலம் மேலும் ரூபா 1,548,000,000 வழங்கப்பட்டிருந்ததுடன், இந்தச் செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீட்டில் ரூபா 35,200,000 நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த காரணத்தால், குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடுகள் நோக்காகக் கொள்ளப்பட்ட பணிக்காகச் செலவிடப்படவில்லை.	செலவின விடயம் 1203–1 இற்கான வருடாந்த நிதி ஒதுக்கீடு ரூபா 6,200 மில்லியன் ஆகும். கறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் பெற்றுக்கொண்ட ஏற்பாடுகளின் தொகை ரூபா 1,543 மில்லியன் ஆகும். 1409 – 140 செலவின விடயத்திற்காக வருடாந்த ஒதுக்கீட்டு மதிப்பீடு மூலம் ரூபா 50 மில்லியனானதுடன், அதற்காக குறைநிரப்பு மதிப்பீடாக ரூபா 5 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.	நிதிப் பிரமாணம் 50 இற்கு அமைய வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும்.

3.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	அவதானிப்புடன் உடன்படுகிறேன். மீளாய்வுகளைச் செய்து, அதன் பிரதியைக் கணக்காய்வு அதிபருக்குச் சமர்ப்பிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கிறேன்.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான விதத்தில் குறிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் சகல கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில்	சிறைச்சாலைத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வு ஐயவினாக்களுக்குக் கணக்காய்வு அதிபர் கோரும் குறிப்பிட்ட கால	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

வழங்குதல் இடம் பெறுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அறிக்கையின் 4.9 பந்தியின் பிரகாரம் கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை.	எல்லைக்குள் பதிலளிப்பதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றளிக்க வேண்டும் என்ற போதிலும், பெரும்பாலான கணக்காய்வுக் ஐயவினாக்களுக்குச் சிறைச்சாலை நிறுவனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பிற பிரிவுகளிடமிருந்து பதில்களை வரவழைத்து, தலைமையகத்தின் மூலம் சுருக்கமாக்கி, கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படுவதால் அதற்கு குறிப்பிடத்தக்க காலம் எடுக்கும்.

3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

அவதானிப்புக்கள்					
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	**பெறுமதி ரூபா**	**இணங்காமை**	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை				
(i)	XIX ஆம் அத்தியாயத்தின் 5.2.3 ஆம் பந்தி	-	இந்தப் பந்தியின் பிரகாரம், விடுதிகளுக்காக அனைத்து வசிக்கும் உத்தியோகத்தரிடமிருந்தும் வாடகை அறவிடப்பட வேண்டிய போதிலும், பொலன்னறுவைச்	இது விடுதியாக அல்லாமல் உத்தியோகத்தர்களின் முகாம் இல்லமாக பயன்படுத்தப்படும் உத்தியோகத்தர் குடியிருப்பாகும என்பதுடன், இங்கு நிரந்தரமாகத்	தாபனக் கோவையின் XIX ஆம் அத்தியாயம் 5.2.3 ஆம் பிரிவின்படி, விடுதிகளுக்கான வாடகையை அனைத்து வசிக்கும் உத்தியோகத்தரிடம

			சிறைச்சாலையில் அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து கடந்த காலம் தொட்டு ரூபா 30 மட்டுமே சம்பளத்திலிருந்து அறவிடப்பட்டுள்ளது.	தங்கியிருக்கும் உத்தியோகத்தர்கள் எவரும் இல்லை. இந்த நிறுவனத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியான சேவையில் ஈடுபட்டுள்ளதோடு, அந்தக் காலங்களில் இங்கு நீர் மற்றும் மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றனர். மேலும், இது தொடர்பாகக் கண்டறிய ஒரு குழுவை நியமித்து, அதன் பரிந்துரைகள் நிறுவனப் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அறிவிக்கிறேன்.	ிருந்தும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii)	XIX ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் பந்தி	673,868	விடுதிகளுக்காக அனைத்து வசிக்கும் உத்தியோகத்தரிடமிருந்தும் வாடகை அறவிடப்பட வேண்டும் என்றபோதிலும், பொலன்னறுவைச் சிறைச்சாலையில் அந்த அதிகாரிகளிடமிருந்து நீர் மற்றும் மின்சாரத்துக்கான செலவுகளை அதிகாரிகள் செலுத்த வேண்டியிருந்தும், 2024 ஆம் ஆண்டுக்கான இந்த	இது விடுதியாக அல்லாமல் உத்தியோகத்தர்களின் முகாம் இல்லமாக பயன்படுத்தப்படும் உத்தியோகத்தர் குடியிருப்பாகும என்பதுடன், இங்கு நிரந்தரமாகத் தங்கியிருக்கும் உத்தியோகத்தர்கள் எவரும் இல்லை. இந்த நிறுவனத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியான சேவையில்	தாபனக் கோவையின் XIX ஆம் அத்தியாயம் 5.8 ஆம் பிரிவின்படி, நீர் மற்றும் மின்சாரத்துக்கான கட்டணங்களை உத்தியோகத்தர்கள் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

				விடுதிக்குரிய மின்சார மற்றும் நீர்க் கட்டணங்கள் அரசால் செலுத்தப்பட்டுள்ளது.	ஈடுபட்டுள்ளதோடு, அந்தக் காலங்களில் இங்கு நீர் மற்றும் மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றனர். மேலும், இது தொடர்பாகக் கண்டறிய ஒரு குழுவை நியமித்து, அதன் பரிந்துரைகள் நிறுவனப் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அறிவிக்கிறேன்.	
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை					
	(i)	நிதிப் பிரமாணம் 104(03) ஆம் பந்தி	-	முழுமையான அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் 07 நாட்களுக்கு மேல் தாமதம் ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டால், இழப்புகள் மற்றும் சேதங்கள் தொடர்பாக உடனடியாக ஓர் ஆரம்ப அறிக்கையை அனுப்ப வேண்டும். ஆனால், சிறைச்சாலை திணைக்களத்தில் 2001 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ஏற்பட்ட 89 இழப்புகள் / சேதங்கள்	தற்போது, விபத்து ஏற்பட்டவுடன் ஆரம்ப அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும், முழுமையான அறிக்கைகளைத் தலைமை அலுவலகத்திற்கு விரைவாக அனுப்பி அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.	நிதிப் பிரமாணம 104(3) இன் படி செயற்பட வேண்டும்.

			தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(03) இன் படி ஆரம்ப அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.		
(ii)	நிதிப் பிரமாணம் 104(04) ஆம் பந்தி	-	நட்டம் அல்லது சேதம் ஏற்பட்ட நாளிலிருந்து 03 மாதங்களுக்குள் ஒரு முழுமையான அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். ஆரம்ப அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாத 89 நட்ட சேதங்கள் தவிர, சிறைச்சாலை திணைக்களத்தில் 2000 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ஏற்பட்ட 39 நட்ட சேதங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம' 104(4) இன் படி முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. அதன்படி, 128 இழப்புகளுக்கு முழுமையான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.	தற்போது, விபத்து ஏற்பட்டவுடன் ஆரம்ப அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும், முழுமையான அறிக்கைகளைத் தலைமை அலுவலகத்திற்கு விரைவாக அனுப்பி அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.	நிதிப் பிரமாணம் 104(4) இன் படி செயற்பட வேண்டும்.
(iii)	நிதிப் பிரமாணம் 571 ஆம் பந்தி	10,422,854	04 வைப்பு கணக்குகள் தொடர்பான 02 வருடங்களைக் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின்படிச் செயற்படப்படவில்லை.	வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் படி செயற்படப்படும் என்று அறிவிக்கிறேன்.	நிதிப் பிரமாணம் 571 இன் படி செயற்பட வேண்டும்.

(iv)	நிதிப் பிரமாணம் 756(06) ஆம் பந்தி	-	சிறைச்சாலை திணைக்களத்தின் 2024 ஆம் ஆண்டின் பொருட்கள் மெய்மையாய்வுக் குழுக்கள் தொடர்பாக, அனைத்து நிறுவனங்களின் பொது 47 அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைப் பற்றி முறையான நடவடிக்கை எடுத்தல் தொடர்பான அறிக்கைகள் 2025 மே 20 ஆம் திகதி வரை சமர்ப்பிக்கப்படவில்லை.	சிறைச்சாலை திணைக்களத்தின் 31 நிறுவனங்களில் பொருட்கள் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டும் என்றபோதிலும், குறைந்த எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களைக் கொண்டு மெய்மையாய்வுப் பணிகளைச் செய்ய வேண்டியிருப்பதால், பொருட்கள் மெய்மையாய்வுப் பணிகளில் தாமதம் காணப்படுவதுடன், குறித்த காலப் பகுதியில் அனைத்து நிறுவனங்களிலும் பொருட்கள் மெய்மையாய்வுப் பணிகளைச் செய்ய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.	நிதிப் பிரமாணம் 756(6) இன் படி செயற்பட வேண்டும்.
(v)	நிதிப் பிரமாணம் 1647(உ) ஆம் பந்தி	-	வாகனப் பொறுப்பு உத்தியோகத்தர்கள், தங்கள் பொறுப்பில் உள்ள மோட்டார் வாகனங்களின் வகை மற்றும் மாதிரி, பதிவு எண், தமக்கு வழங்கப்பட்ட திகதி, ஒப்படைக்கப்பட்ட திகதி மற்றும் அது குறித்த விவரங்கள் மற்றும் பிற சரியான தகவல்களைக் கொண்ட ஒரு பட்டியலைப்	வாகனங்கள் தொடர்பான அனைத்து விவரங்களையும் உள்ளடக்கிய ஒரு பட்டியலைப் பராமரிக்குமாறு குறித்த நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.	நிதிப் பிரமாணம் 1647(உ) இன் படி செயற்பட வேண்டும்.

			பராமரிக்க வேண்டும் என்றபோதிலும், 05 சிறைச்சாலை நிறுவனங்கள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அவ்வாறு செய்யவில்லை.		
(இ)	2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி	-	அனைத்து எரிபொருள் பரிசோதனைக்குப் பிறகும், 12 மாதங்கள் அல்லது 25,000 கிலோ மீட்டர் தூரம் ஓட்டிய பிறகு அல்லது என்ஜின் தொடர்பான முக்கிய பழுதுபார்ப்புக்குப் பிறகு இவற்றில் எது முதலில் வருகிறதோ அதற்குப் பிறகு மீண்டும் ஒரு எரிபொருள் பரிசோதனை செய்ய வேண்டும் என்றபோதிலும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 12 சிறைச்சாலை நிறுவனங்களில் 122 வாகனங்கள் அவ்வாறு செய்யவில்லை.	இது தொடர்பாகக் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்கச் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்படும் என்று அறிவிக்கிறேன்.	இலக்கம் 30/2016 பொது நிர்வாகச் சுற்றறிக்கையின்படி செயற்பட வேண்டும்.
(ஈ)	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் நிதிப் பிரமாணம் 371(5) பந்தி	-	உப கட்டுநிதி வழங்கப்பட்ட பிறகு, குறித்த பணி முடிந்த 10 நாட்களுக்குள் அந்த உப கட்டுநிதியை திருப்பிச் செலுத்த வேண்டிய போதிலும், சிறைச்சாலைத்	உப கட்டுநிதி பெற்ற பணி முடிந்தவுடன் உடனடியாக உப கட்டுநிதியை திருப்பிச் செலுத்துமாறு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள	நிதிப் பிரமாணம் 371(5) இன் படி பெறப்பட்ட முற்பணத்தை விரைவில் திருப்பிச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

			தலைமையகத்தில் 26 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 977,630 முற்பணத்தில், ரூபா 77,938 ஆன தொகை குறித்த அதிகாரியிடம் 11 முதல் 52 நாட்கள் வரை இருந்தது.	ளனர்.	
(உ)	2017 திசெம்பர் 29 ஆந் திகதிய 262/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 4 மற்றும் 6 ஆம் பந்திகள்	1,389,791	2018 ஜனவரி 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், ஓய்வூதியம் / மரண பணிக் கொடை பெற்ற அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன்களை, தமது நிறுவனங்களின் முற்பணம் "பீ" கணக்கில் உள்ளடக்கப்படாமல் இருப்பதை நிறுவனத் தலைவர்கள் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், சிறைச்சாலை திணைக்களத்தில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி அன்று ஓய்வுபெற்ற அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,285,609 தொகையில், 61 சதவீதத்திற்கும் அதிகமான தொகை ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் இருந்தது.	திணைக்களத்தின் நிலுவைக் கடன்களை (31 சிறைச்சாலை நிறுவனங்களில் உள்ளது) அறவிட அதிகபட்ச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அந்தக் கடன்களைக் குறைக்க எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.	இலக்கம் 262/2017 அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.
(ஊ)	அரச பெறுகைகள் வழிகாட்டிக்	-	விளம்பரம் செய்வது பொருளாதார	எதிர்காலத்தில் சரியான	அரச பெறுகைகள் வழிகாட்டல்

	கோவையின் 3.4.3 (ஆ) பந்தி		ரீதியில் இலாபமற்ற குறைந்த மதிப்புடைய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக அல்லது அடிக்கடி பயன்படுத்தப்படும் பொருட்களை வாங்குவதற்காக விநியோகத்தர்களைப் பதிவு செய்ய வேண்டியதுடன், இந்தப் பிரிவின்படி, மோட்டார் வாகனங்களைப் பழுதுபார்ப்பது போன்ற விசேட வகையான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கக்கூடிய விநியோகத்தர்களின் பெயர்களை உள்ளடக்கிய ஒரு பட்டியலை கொள்முதல் அமைப்புத் தயாரிக்க வேண்டிய போதிலும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 20 சிறைச்சாலை நிறுவனங்களில் கராஜ் மற்றும் சேவை வழங்குநர்கள் பதிவு செய்யப்படவில்லை	வழிகாட்டல்களின் படி செயற்படச் உரிய நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்படும் என்று அறிவிக்கிறேன்.	கோவையின்படி செயற்பட வேண்டும்.
(எ)	திணைக்கள உள்ளகச் சுற்றறிக்கைகள்				
	(i) 1992 ஜூன் 08 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 20/92 மற்றும் 2022 நவம்பர் 08 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் கே.01/வெளிநாட்	-	வெளிநாட்டவர் ஒருவர் சிறையிலடைக்கப்பட்ட பிறகு, அது தொடர்பான அறிக்கை சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கும், அதன் பிரதிகள்	எதிர்காலத்தில் இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கிறேன்.	குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின்படி செயற்பட வேண்டும்.

	டு அலுவல்கள்/2022		அந்த நபர் (கைதி) சேர்ந்த நாட்டின் தூதரகத்திற்கும் மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கும் அனுப்பப்பட வேண்டிய போதிலும், 26 கைதிகள் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அறிக்கைகளுடன் அறிவிப்புகள் வழங்கப்பட்டதற்கான எழுத்து மூலமான சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.		
(ii)	சிறைச்சாலைத் திணைக்கள நிரந்தரக் கட்டளைகள் 511 மற்றும் 222 ஆம் பந்தி	-	இந்தச் சட்டரீதியான சிறைச்சாலைச் சட்டத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளபடி, சிறையிலடைக்கப்பட்ட கைதிகளுக்கு தினசரி உணவு வழங்கும் போது, ஒரு கைதிக்கு வழங்கப்படும் பச்சையான மற்றும் உலர் உணவுப் பொருட்களின் அளவு ஒரு நிலையான அளவாக இருக்க வேண்டிய போதிலும், ஒவ்வொரு சிறைச்சாலை நிறுவனத்திலும் அந்த அளவுகள் வெவ்வேறு அளவுகளைக் கொண்டிருந்தன.	இது தொடர்பாகக் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளச் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்படும் என்று அறிவிக்கிறேன்.	சிறைச்சாலைத் திணைக்கள நிரந்தரக் கட்டளைகளின்படி செயற்பட வேண்டும்.

3.4 வைப்பு மீதிகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	இலக்கம் 6000-0-0-006-0-081 கொண்ட வைப்புக் கணக்கில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா 3,722,705 மீதியொன்று இருந்ததுடன், இந்த வைப்புகள், கைதிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளில் செலவு வைப்பதற்குரிய பணமாக இருந்ததுடன், இந்த நிலுவையில் 45 சதவீதம் அதாவது ரூபா 1,675,808 தொகையானது 02 வருடங்களுக்கு மேலாக பொது வைப்புக் கணக்கில் இருந்தது.	சிறை ஊதியம் பெறத் தகுதியான கைதிகளுக்குத் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளைத் திறக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், விரைவில் உரிய கணக்குகளைத் திறந்து, அந்தச் சிறை ஊதியத்தை உரிய கைதிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்க நடவடிக்கை எடுப்பதாகக் கணக்காய்வுக்குத் தயவுடன் தெரியப்படுத்துகிறேன்.	சிறை ஊதியத்தை கைதிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளில் காலதாமதமின்றி வரவு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	இலக்கம் 6000-0-0-1-16 கொண்ட வைப்புக் கணக்கில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா 6,860,070 மீதி இருந்ததுடன், இந்த வைப்புகள், பிணை வைப்புத் தொகை செலுத்த வேண்டிய அதிகாரிகளின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட பிணைப் பணம் அந்த அதிகாரிகளின் வங்கிக் கணக்குகள் திறக்கப்படும் வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பணமானதுடன், நிதிப் பிரமாணம் 885 இன் பிரகாரம் முறையாக நடவடிக்கை எடுக்கப்படாததால் இந்த மீதியில் 21 சதவீதம் அதாவது ரூபா 1,418,010 தொகையான வைப்பு 02 வருடங்களுக்கு மேலாக பொது வைப்புக் கணக்கில் இருந்தது.	பிணை வைப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 885 இன் பிரகாரம் முறையாக நடவடிக்கை எடுக்கவும், கணக்குகள் திறக்காத அதிகாரிகளுக்கு விரைவாகக் கணக்குகளைத் திறக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து நிறுவனங்களின் சிறைச்சாலை அத்தியட்சகர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கணக்காய்வுக்குத் தெரிவிக்கிறேன்.	நிதிப் பிரமாணம் 885 இன் பிரகாரம் விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப, கைதிகளைப் புனர்வாழ்வு அளித்து நல்ல குடிமக்களாகச் சமூகத்தில் மீளச் சேர்ப்பதற்குத் தேவையான சமூகப் பின்னணியை உருவாக்குவது சிறைச்சாலையின் முக்கிய பணியாக உள்ளதுடன், இதன்போது, கைதிகளைக் கல்வி, வேலை போன்ற அர்த்தமுள்ள செயற்பாடுகளிலும், ஏனைய வேலைத் திட்டங்களிலும் ஈடுபடுத்தி, ஒரு நேர்மறையான சிறைச்சாலைச் சூழலை உருவாக்குவதோடு, கைதிகளின் ஆற்றலை ஆக்கபூர்வமான தொழில்கள் நோக்கித் திசைதிருப்பி, சமூகமயமாக்கலுக்குத் தயார்ப்படுத்தும் வகையில் புனர்வாழ்வு நடவடிக்கைகள் பேணப்பட வேண்டிய போதிலும், சிறைச்சாலை நெரிசல் காரணமாக கைதிகளுக்கு முறையாகப் புனர்வாழ்வு அளிக்கப்படவில்லை.	சிறைச்சாலை நெரிசல் திணைக்களத்திற்கு ஒரு பெரிய சவாலாக உள்ளதுடன், வெலிக்கடைச் சிறைச்சாலைக் கட்டடத் தொகுதியை நிறுவுதல், வட்டரக்க சிறைச்சாலையில் மதில் மற்றும் கைதி கட்டடம் கட்டுதல், வாரியப்பொல சிறைச்சாலையை விரிவுபடுத்துதல், பல்லேகலச் சிறைச்சாலையில் கைதி கட்டடங்கள் கட்டுதல், களுத்துறை சிறைச்சாலையில் கட்டடங்கள் கட்டுதல் போன்ற செயற்திட்டங்கள் மூலம் சிறைச்சாலையின் கொள்ளளவை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன், 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் கீழ் சிறைக் கைதிகளின் தொழில் திறனை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 100 மில்லியன் ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி கைதிகளுக்கு முறையான புனர்வாழ்வு அளிப்பதற்கான திட்டங்களைத் தயாரித்து, தேவையான அங்கீகாரத்தைப் பெறுவதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.	சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு முறையாகப் புனர்வாழ்வு அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.2 திட்டமிடல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திணைக்களம் அதன் செயல்பாட்டுத் திட்டத்தைத் தயாரிக்கும்போது, அந்த ஆண்டில் செயல்படுத்தப்படும் செயற்திட்டங்களுக்குத் தொடர்புடைய உண்மையான செயல்பாடுகளை அடையாளம் கண்டு, அதற்கேற்ப ஒதுக்கீடுகளை மதிப்பிட்டுத் திட்டத்தைத் தயாரித்துள்ளது. முறையாக அங்கீகரிக்கப்பட்ட செயல்பாட்டுத் திட்டம் அடிக்கடி திருத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதால், அலகின் அனைத்துப் பணிகளையும் (பொருட்கள், சேவைகள் மற்றும் செயற்திட்டங்கள்) நிறைவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு முகாமைத்துவக் கருவியாக அதைப் பயன்படுத்த முடியாது இருந்ததுடன், சிக்கனமான, வினைத்திறனான மற்றும் பயனுள்ள முறையில் சரியான நேரத்தில் திட்டங்களைத் தயாரிப்பதற்கான எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடையவும் முடியவில்லை.	ஆண்டின் தொடக்கத்தில் தேவையின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட செயல்பாடுகள் பின்னர் வரையறுக்கப்பட்ட ஒதுக்கீடுகளுக்குப் பொருந்தும் வகையில் முன்னுரிமையின் அடிப்படையில் மீள்சீரமைப்பு செய்யப்பட வேண்டிய தேவை உள்ளது. வரையறுக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீட்டைக் கொண்டு தீவின் அனைத்து நிறுவனங்களின் பிரச்சினைகளையும் தீர்க்கப் பயன்படுத்தப்படும் ஒரு எளிய தந்திரோபாய முகாமைத்துவக் கருவியாகவே செயல்பாட்டுத் திட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளது.	அரச நிதிச் சுற்றறிக்கை 02/2020 இன் பிரகாரம் செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

4.3 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	2024 நவம்பர் 30 ஆம் திகதி திருத்தப்பட்ட செயல் திட்டத்தின்படி, ஒவ்வொரு மூலதனச் செலவினத் தலைப்புகளுக்குமான மதிப்பிடப்பட்ட செலவு மற்றும் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவு ஆகியவற்றைப் பரிசோதித்தபோது, 05 சந்தர்ப்பங்களில் ஒதுக்கீடுகள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன.	ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் மீதமுள்ள சதவீதம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டதற்கான காரணங்கள் மற்றும் தற்போதைய நிலைமை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.	ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினை உகந்த முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2024 ஆம் ஆண்டின் செயல் திட்டத்தின் மூலதனச் செலவினத் தலைப்புகளில் திட்டமிடப்பட்ட செயல்பாடுகள் / செயற்திட்டங்களின் நிதி முன்னேற்றத்தைப் பரீட்சித்தபோது, 13 சந்தர்ப்பங்களில் செயல்திறன் 0 சதவீதமாகவும், செயல்திறன் 50 சதவீதத்திற்கும் குறைவாகவாக 03 சந்தர்ப்பங்களும் இருந்தன.	நிதி செயல்திறன் இல்லாமையில் தாக்கத்தை ஏற்றடுத்திய காரணங்கள் மற்றும் தற்போதைய நிலைமை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.	ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினை உகந்த முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.4 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	செலவின விடயம் 2102 இன் கீழ் கைவிலங்குகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 5,850,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 2024 நவம்பர் மாத திருத்தத்தின்படி ரூபா 5,805,600 ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த நிதி அந்தப் பணிக்காகப் பயன்படுத்தப்படாமல், வேறு அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.	சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு ஒதுக்கப்படும் மிகக் குறைந்த ஒதுக்கீட்டை விவேகத்துடன் முகாமைத்துவம் செய்வதன் மூலம் குறை பயன்பாட்டைத் தடுக்கும் நோக்குடன், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் திணைக்களத்திற்குத் தேவைப்பட்ட வேறு அத்தியாவசியப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.	நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடுகளை உண்மையின் அடிப்படையில் தயாரித்துச் சமர்ப்பிக்க வேண்டும்.
(ஆ)	செலவின விடயம் 2102 இன் கீழ் ஊடகப் பிரிவின் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ஆரம்ப மதிப்பீடாக ரூபா 3,750,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அது நவம்பர் 30 ஆம் திகதி திருத்தத்தில் ரூபா 5,305,870 ஆக அதிகரிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த நிதி குறித்த உபகரணங்களுக்காகப் பயன்படுத்தப்படவில்லை.	சிறைச்சாலைகள் திணைக்களத்தின் தேவைக்கு ஏற்றவாறு ஏலங்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால், இரண்டு முறை விலைமனுக்கள் கோரப்பட்டன. தற்போது பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு பணம் செலுத்தப்படவுள்ளது.	நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடுகளை உண்மையின் அடிப்படையில் தயாரித்துச் சமர்ப்பிக்க வேண்டும்.

4.5 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்			கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	பொதி மற்றும் பொடி ஸ்கேனர் இயந்திரங்கள் கொள்வனவு செய்தல்			
	(i)	09 சிறைச்சாலை நிறுவனங்களுக்காக ரூபா 123,762,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 06 பொதி ஸ்கேனர் இயந்திரங்கள் மற்றும் 04 பொடி ஸ்கேனர் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்ட நாள் முதல் 2024 ஆம் ஆண்டு வரை பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புக்காக ரூபா 140,108,489 செலவிடப்பட்ட போதிலும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 08 நிறுவனங்களில் 04 பொதி ஸ்கேனர் இயந்திரங்களும் 04 உடல் ஸ்கேனர் இயந்திரங்களும் 04 ஆண்டுகள் 04 மாதங்களுக்கும் மேலாக செயலிழந்திருந்தன.	தற்போது பெரும்பாலான இயந்திரங்கள் உரிய முறைகளின் கீழ் பழுதுபார்க்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.	தடைசெய்யப்பட்ட பொருட்களைச் சிறைக்குள் கொண்டு வருவதைத் தடுப்பதற்காக பொதி மற்றும் உடல் ஸ்கேனர் இயந்திரங்கள் செயல்பாட்டு மட்டத்தில் பேணப்பட வேண்டியதுடன், அவற்றை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
	(ii)	கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் உள்ள உடல் ஸ்கேனர் இயந்திரத்தைப் பழுதுபார்க்க அதன் உள்ளூர் முகவர் நிறுவனத்தினால் 2020 செப்டம்பர் 04 ஆம் திகதி ரூபா 4,832,460 என மதிப்பிட்டிருந்ததுடன், 2022 ஜூன் 09, 2023 மார்ச் 13, மற்றும் 2023 ஜூலை 11 ஆம் திகதிகளில் சேவை /	இயந்திரத்தைப் பழுதுபார்க்கத் தேவையான பாகங்களை இறக்குமதி செய்வதற்காக தற்போது கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையின் உடல் ஸ்கேனர் இயந்திரத்திற்குத் தேவையான பாகங்களுக்குரிய நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன.	தடைசெய்யப்பட்ட பொருட்களைச் சிறைக்குள் கொண்டு வருவதைத் தடுப்பதற்காக பொதி மற்றும் உடல் ஸ்கேனர் இயந்திரங்கள் செயல்பாட்டு மட்டத்தில் பேணப்பட வேண்டியதுடன், அவற்றை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	தொழில்நுட்ப வல்லுநர்கள் வந்து பழுதுபார்ப்பதற்காக இயந்திரத்தின் பாகங்களை எடுத்துச் சென்றபோதும், அவை மீண்டும் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலைக்குத் திருப்பி அளிக்கப்படவில்லை. கணக்காய்வு செய்யப்பட்ட திகதி வரை, இயந்திரத்தின் சட்டம் மற்றும் வெளிப்புற உறை மட்டுமே கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்தது.		
(iii)	பொதி மற்றும் உடல் ஸ்கேனர் இயந்திரங்களின் சேவைக்குத் தொடர்பான சேவை ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் சபையின் தொழில்நுட்ப X - கதிர் இயந்திரங்களைப் பயன்பாடு / வைத்திருப்பதற்கான இடைக்கால உரிமத்தைப் பெறுவதற்கு இந்த இயந்திரங்கள் அளவீடு (Calibration) செய்யப்பட வேண்டும் என்பது அவசியமானது என்று அவதானிக்கப்பட்டதுடன், இந்த அனைத்து இயந்திரங்களும் அளவீடு (Calibration) செய்தல், பழைய சேவை ஒப்பந்தத்தின்படி ஒரு தனியார் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டதால், இவ்வாறு சேவை ஒப்பந்தத்தை	2023 ஆம் ஆண்டில் பெரும்பாலான இயந்திரங்கள் பழுதுபார்க்கும் நிலையில் இருந்ததால் சேவை ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், இந்த ஆண்டில் குறித்த இயந்திரங்கள் பழுதுபார்க்கப்பட்ட பின்னர் மீண்டும் ஒப்பந்தம் செய்யப்படும். அதே போன்று சேவை ஒப்பந்தங்களைப் பெறுவதற்கு சேவை முகவர் நிறுவனத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தயவுடன் தெரிவிக்கிறேன். இந்த இயந்திரங்களை இயக்கவும், பராமரிப்புச் சேவைகளை வழங்கவும் முறையான பயிற்சி பெற்ற மற்றும் பிரத்தியேகமாக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் எல்லா நிறுவனங்களிலும் இல்லாததுடன், பழுதுபார்ப்பு தொடர்பான கோவைகள்	தடைசெய்யப்பட்ட பொருட்களைச் சிறைக்குள் கொண்டு வருவதைத் தடுப்பதற்காக பொதி மற்றும் உடல் ஸ்கேனர் இயந்திரங்கள் செயல்பாட்டு மட்டத்தில் பேணப்பட வேண்டியதுடன், அவற்றை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		மேற்கொள்ளாததால் இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. நிதிப் பிரமாணம் 802(2) இன் பிரகாரம், இயந்திரங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகள் இயந்திரங்களின் பொறுப்பு, பயன்பாடு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றைப் பல்வகைப்பட்ட முறையில் நிர்வகிக்க வேண்டியதுடன் அந்தப் பணிகளில் முறையான கவனத்தினைச் செலுத்தல் வேண்டும்.	பராமரிக்கப்படுகின்றன. எதிர்காலத்தில் அனைத்து நிறுவனங்களிலும் உள்ள பொதி மற்றும் உடல் ஸ்கேனர் இயந்திரங்களுக்குத் தனிப் பதிவேட்டினைப் பேணிச் செல்லுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	
	(iv)	இந்த இயந்திரங்களை வழங்கிய நிறுவனம் பொதி பரீட்சிக்கும் உபகரணங்கள் மற்றும் உடல் ஸ்கேனர் உபகரணங்களைச் பரீட்சிப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் 12 அதிகாரிகளுக்கு ஐக்கிய அமெரிக்கா மற்றும் நெதர்லாந்தில் வெளிநாட்டுப் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், அந்த அதிகாரிகள் வேறு பிரிவுகளில் பணிபுரிவதால், இந்த இயந்திரங்களின் செயல்பாட்டிற்கு விசேட பங்களிப்பை வழங்கவில்லை.	இது தொடர்பாக ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.	தடைசெய்யப்பட்ட பொருட்களைச் சிறைக்குள் கொண்டு வருவதைத் தடுப்பதற்காக பொதி மற்றும் உடல் ஸ்கேனர் இயந்திரங்கள் செயல்பாட்டு மட்டத்தில் பேணப்பட வேண்டியதுடன், அவற்றை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரமைப்பு (ICTA) ரூபா 40,162,968 பெறுமதியான லங்கா அரச இணைய வசதியை (LGN) 2023 ஆம் ஆண்டில் 23 சிறைச்சாலை நிறுவனங்களுக்குப் பரிசாக வழங்கியிருந்ததுடன், சிறைச்சாலை நிறுவனங்களில்		அரச தகவல் வலையமைப்பில் ஏற்படும் தொடர்ச்சியான செயலிழப்புகள் காரணமாக சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ அமைப்பின் தொடர்ச்சியை உறுதி செய்வதற்காக மாற்று இணைய இணைப்பைப் பேண	LGN அமைப்பிலிருந்து உகந்த சேவையைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உள்ள இந்த இணைப்பிற்கான மாதாந்திர இணையச் சேவைச் செலவுகளையும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரமைப்பு ஏற்றுக்கொள்கிறது. சிறைச்சாலை நிறுவனங்களில் உள்ள இலங்கை அரச இணையத்தள (LGN) இணைப்பில் உள்ள பிழைகள் பழுதுபார்க்கப்பட்டுப் பயன்படுத்தப்படுவதில் குறிப்பிடத்தக்க தாமதம் ஆவது அவதானிக்கப்பட்டதுடன், இதனால் சிறந்த சேவையைப் பெறுவதற்கான வாய்ப்பு குறைவாக இருந்தது. வரம்பற்ற தொடர்ச்சியான வழங்கல் (Unlimited) வழங்கப்பட்டிருந்தாலும், லங்கா அரச இணைய (LGN) இணைப்புக்கு மேலதிகமாக, மாதிரிப் பரீட்சிப்பிற்கு அமைய 2024 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,146,690 பெறுமதியான இணைய வசதியை 13 சிறைச்சாலை நிறுவனங்கள் வேறு வழங்குநர்களிடமிருந்து பெற்றுக்கொண்டிருந்தன.	வேண்டியிருந்தது. அதன்படி, 2024 ஆம் ஆண்டில் அனைத்து நிறுவனங்களுக்கும் மாற்று இணைய இணைப்பை வழங்கத் திணைக்களம் வழங்கிய அறிவுறுத்தலின் பேரில் 13 நிறுவனங்கள் இந்தக் கட்டணங்களைச் செலுத்தியுள்ளன. சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ அமைப்பு நாடு முழுவதும் 28 நிறுவனங்களில் இயங்குகிறதுடன், மேலும் ஒரு நிறுவனத்தில் இணையம் செயலிழந்தால் முழுத் தரவு அமைப்பின் துல்லியத்தையும் பாதிக்கும் என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4.6 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	வெலிக்கடை சிறைச்சாலையில் 63/1 முதல் 63/8 வரையான குடியிருப்புகளைப் பழுதுபார்க்கும் ஒப்பந்தம் 2023 நவம்பர் 14 ஆம் திகதி ரூபா 33,130,441 மொத்த பெறுமதியில் ஒரு தனியார் நிறுவனத்திற்கு வழங்க அங்கீகரிக்கப்பட்டதுடன், இந்த கட்டடத்தின் நிர்மாணங்கள் முடிக்கப்பட்டு	தற்போது பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கிறேன்.	நிர்மாணப் பணிகள் முறையாக மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	2024 ஜூலை 09 ஆம் திகதி சிறைச்சாலைகள் திணைக்களத்திடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டதுடன், 08 அரச குடியிருப்புகள் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன எனவும், பழுதுபார்ப்பு பணிகள் முறையாக மேற்கொள்ளப்படாததால், மீண்டும் பழுதுபார்க்கப்பட வேண்டிய பணிகள் இந்த அறிக்கை திகதி வரை மேற்கொள்ளப்படவில்லை.		
(ஆ)	கேகாலை சிறைச்சாலையின் எல்லைச் சுவர் அமைக்கும் ஒப்பந்தம் 2024 மே 25 ஆம் திகதி உரிய ஒப்பந்தக்காரருக்கு ரூபா 16,568,824 (வட் நீங்கலாக) பெறுமதியில் வழங்கப்பட்டிருந்ததுடன், 2024 நவம்பர் 18 ஆம் திகதிக்கு 90.3 சதவீத பௌதீக முன்னேற்றம் அடையப்பட்டிருக்க வேண்டிய போதிலும், அன்றைய தினம் உண்மையான பௌதீக முன்னேற்றம் 2 சதவீதம் மட்டுமே இருந்தது. ஒப்பந்த நிறுவனத்தின் குறைபாடுகள் காரணமாக செயற்திட்டத்தின் நிர்மாணம் தாமதமாகியதுடன், இந்த எல்லைச் சுவர் பழுதுபார்க்கப்படும் இடத்திற்கு அருகில் சுமார் 10 மீட்டர் தூரத்திற்குள் மேலும் 02 இடங்களில் வெடிப்புகள் அவதானிக்கப்பட்டதுடன், இது எதிர்காலத்தில் மீண்டும் ஒரு ஆபத்தை ஏற்படுத்தும் நிலையாக இருந்தது.	NBRO நிறுவனத்தின் அனுமதியினைப் பெற்ற பிறகு, உரிய சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.	தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் முழுமையான ஆலோசனையின்படி கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2024 ஆம் ஆண்டின் பெறுகைகள் திட்டத்தில் சேர்க்கப்படாத 03 மூலதனச் செலவினத் தலைப்புகளின்	அவதானிப்புடன் உடன்படுகிறேன். மூலதனச் செலவினத் தலைப்புகள் கொள்முதல் திட்டத்தில்	மீளாய்வாண்டின் கொள்முதல் திட்டத்தின்படி செயற்பட வேண்டும்.

கீழ் உள்ள 09 செயல்பாடுகளுக்காக ரூபா 61,419,696 செலவிடப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டின் கொள்முதல் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மேற்கொள்ளத் தவறிய 03 மூலதனச் செலவினத் தலைப்புகளின் கீழ் உள்ள 07 செயல்பாடுகளுக்காக ரூபா 27,800,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்தது.	சேர்க்கப்படாததற்கான காரணங்கள் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

4.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	சிறைச்சாலை நிறுவனங்களின் கைத்தொழில் பிரிவுகளில் குறைவாகப் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பற்றிய தகவல்களைப் பரீட்சிப்பு செய்தபோது, 06 சிறைச்சாலை நிறுவனங்களில் 21 இயந்திரங்கள் / உபகரணங்கள் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பது தெரிய வந்ததுடன், அந்த இயந்திரங்கள் / உபகரணங்களைப் பழுதுபார்ப்பதற்கோ அல்லது உகந்த முறையில் பயன்படுத்தக்கூடிய சிறைச்சாலை	இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.	குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்களை முழுத் திறனுடன் பயன்படுத்த ஒரு முறையான வேலைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

	நிறுவனங்களுக்கு வழங்குவதற்கோ, நடவடிக்கை எடுத்து உற்பத்திச் செயன்முறையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.		
(ஆ)	சிறைச்சாலை கைத்தொழில் பிரிவுகளில் செயலிழந்த நிலையில் உள்ள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பற்றிய தகவல்களைப் பரீட்சிப்பு செய்தபோது , 08 சிறைச்சாலை நிறுவனங்களில் 50 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் செயலிழந்த நிலையில் உள்ளன என்பதும், இவற்றில் 04 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைப் பழுதுபார்க்க முடிந்தபோதும், அதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும், அகற்றப்பட வேண்டிய இயந்திரங்களை அகற்றுவதற்குத் தேவையான முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதும் தெரிய வந்தது.	இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.	செயலிழந்த மற்றும் அகற்றப்பட வேண்டிய சொத்துக்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	பொலன்னறுவை, அங்குணுகொலபெலஸ்ஸ, மகர, பல்லேகல திறந்த வெளி சிறை முகாம், போகம்பர, வட்டரக்க, பூஸ்ஸ, வீரவில, தளுபத்த, களுத்துறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, ஆராய்ச்சி மற்றும் சீர்திருத்த பயிற்சி மையம், மற்றும் வெலிக்கடை ஆகிய 14 சிறைச்சாலை நிறுவனங்களினால் 2024	இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.	பயன்படுத்தப்படும் வாகனங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	திசெம்பர் 31 ஆம் திகதியில் பயன்படுத்தும் 39 வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்படவில்லை.		
(ஈ)	நிதிப் பிரமாணம் 802 இன் பிரகாரம், வாகன வசதிகளை வழங்கும் திணைக்களங்களின் தலைவர்கள் அவை மிகையாக இல்லை என்பதையும், பயன்பாடின்றி இல்லை என்பதையும் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், 15 சிறைச்சாலை நிறுவனங்களில் 29 வாகனங்கள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டிருந்தன.	இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.	நிதிப் பிரமாணம் 802 இன் பிரகாரம் செயற்பட வேண்டும்.
(உ)	21 சிறைச்சாலை நிறுவனங்களுக்குச் சொந்தமான, பயன்படுத்த முடியாத நிலையில் அகற்றப்படப் பரிந்துரைக்கப்பட்டு 05 வருடங்கள் கடந்துவிட்டபோதும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அகற்றப்படாமல் இருந்த 33 வாகனங்கள் இருந்தன.	இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.	அகற்றும் பணிகள் முறையாக மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	31 சிறைச்சாலை நிறுவனங்களுக்கு உரியதாக அதன் உத்தியோகத்தர்களுக்குத் தேவையான் கட்டடங்களை நிர்மாணித்தல் தொடர்பான 286 உட்கட்டமைப்புத் தேவைகள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அடையாளம் காணப்பட்டபோதும், அவற்றைச்	அடையாளம் காணப்பட்ட சிறைச்சாலை நிறுவனங்களில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பணிகளை, கிடைக்கும் வரையறுக்கப்பட்ட ஒதுக்கீடுகளை முறையாக முகாமைத்துவம் செய்து, முன்னுரிமையின் அடிப்படையில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு	உத்தியோகத்தர்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	செயல்படுத்தவும், அபிவிருத்தி செய்யவும் முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	வருகிறது.	
(எ)	ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச தரநிலைகள் மற்றும் தேசிய சட்ட கட்டமைப்புகள், ஒழுங்குவிதிகள் அல்லது பிற வழிகாட்டுதல்கள் ஆகியவற்றின் அடிப்படையில், உளவியல் மற்றும் உடல் ஆரோக்கியத்திற்குப் பொருத்தமான வசதிகளுடன் ஒரு சிறைச்சாலையில் கைதி தங்க வைக்கப்பட வேண்டிய போதிலும், 31 சிறைச்சாலை நிறுவனங்களில் குடியிருப்பாளர்களுக்குத் தேவையான 228 உட்கட்டமைப்புத் தேவைகள் அடையாளம் காணப்பட்டபோதும், அவற்றைச் செயல்படுத்தவும், அபிவிருத்தி செய்யவும் முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும், இவற்றில் வெலிக்கடை சிறைச்சாலைக்கே அதிக எண்ணிக்கையிலான குடியிருப்பாளர்களின் உட்கட்டமைப்பு வசதித் தேவைகள் இருக்கின்றது என்பதும் உறுதிப்படுத்தப்பட்டது.	குடியிருப்பாளர்களின் சுகாதாரத்திற்குத் தொடர்பான கோரிக்கைகள் 2025 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டில் நிறைவேற்றப்படும் என்று சிறைச்சாலை அத்தியட்சகர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச தரநிலைகளுக்கு இணங்க குடியிருப்பாளர்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஏ)	புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சினால் 2013 ஆம் ஆண்டில் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் தளுபொத்த இளைஞர் குற்றவாளிகள் சீர்திருத்த நிலையத்திற்கு முறையான கையளிப்பு இல்லாமல்	அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	பழுதுபார்க்கப்பட வேண்டிய முதல் சந்தர்ப்பத்திலேயே அந்தப் பழுதுபார்க்கும் பணியை முறையாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	வழங்கப்பட்ட இலக்கம் PA – 7034 கொண்ட கெப் வாகனத்திற்கான ஆவணங்கள் எதுவும் வழங்கப்படாததால், 2013 ஆம் ஆண்டில் செய்ய முடிந்த ஒரு பழுதுபார்க்கும் பணியைச் செய்ய முடியாமல் போன காரணத்தால் இதன் காரணமாக இந்தக் கெப் வாகனம் 2013 ஆம் ஆண்டு முதல் தற்போது வரையிலும் இயங்காது உள்ளதுடன், 2024 ஆம் ஆண்டில் அகற்றுவதற்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.		
(ஐ)	நீதிமன்றத்தால் அரச உடமையாக்கப்பட்டுச் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்குக் கிடைத்த 36 வாகனங்கள் 18 சிறைச்சாலை நிறுவனங்களில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை வைக்கப்பட்டிருந்தன என்பதும் அவற்றில் 08 வாகனங்கள் மட்டுமே தற்போது இயங்குகின்றன என்பதும், மீதமுள்ள 28 வாகனங்கள் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தன என்பதும் வெளிப்படுத்தப்பட்டது.	தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	அரச நிறுவனங்களிடமிருந்து வாகனங்களைப் பெறும்போது சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் பெயரில் பதிவு செய்ய முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஒ)	சிறைச்சாலை நிறுவனங்களுக்குச் சொந்தமான 49 காணிகளில் 357.8139 ஏக்கர் நிலத்தின் உரிமை இன்னமும் பெற்றுக்கொள்ளப்படாது இருந்த போதிலும், இந்தக் காணிகள் சிறைச்சாலைகள், சிறைக்கூடங்கள், திறந்தவெளிச் சிறை முகாம்கள், புனர்வாழ்வு	உரிமை மாற்றம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	இந்தக் காணிகளின் உரிமையைப் பெற்றுக்கொள்ள விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	மையங்கள் மற்றும் பண்ணைகளாகச் சிறைச்சாலை திணைக்களத்தால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.		
(ஓ)	சிறைச்சாலை நெரிசலைக் குறைப்பதற்காக, பொரல்லையில் அமைந்துள்ள வெலிக்கடை சிறைச்சாலைத் தொகுதி (சிறைச்சாலைத் தலைமையகம், வெலிக்கடை சிறைச்சாலை, கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலை, சிறைச்சாலை வைத்தியசாலை, மகளிர் பிரிவு மற்றும் மாகசின் சிறைச்சாலை) ஹொரணை மில்லாவப் பிரதேசத்தில் இடமாற்றம் செய்யும் திட்டம் திட்டமிடப்பட்டிருந்ததுடன், சுமார் 16.436 ஹெக்டேயர் நிலப்பரப்பு கொண்ட இந்த நிலம் 2022 நவம்பர் 16 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு இலவச மானியத் திட்டத்தின் மூலம் கையளிக்கப்பட்ட போதிலும், ஹொரணை மில்லாவப் பிரதேசத்தில் உள்ள நிலம் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு இன்னும் கையளிக்கப்படவில்லை. 2024 ஜனவரி 11 ஆம் திகதி அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டின்படி, பொரள்ளையில் உள்ள நிலத்தின் பெறுமதி ரூபா 31,844,850,000 ஆக இருந்ததுடன், உரிமை	இது தொடர்பாக நீதி அமைச்சுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டதுடன், அதற்கமைய தேவையான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கிறேன்.	இது தொடர்பாக அரசாங்கத்தின் தற்போதைய கொள்கைக்கு அமைய உடனடியாகவும் முறையாகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கையளிக்கப்படாததால் மீளாய்வாண்டில் கணக்கீடு செய்யப்படவில்லை. கொழும்பில் உள்ள பிரதான சிறைச்சாலைக் கட்டடங்களை நிர்மாணிக்காததால், சிறைச்சாலை நெரிசல் காரணமாகச் சிறைச்சாலைகள் திணைக்களம் தற்போது முன்பை விட பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறது.		

4.8 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	10 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ள 22 வாகன விபத்துகள் உட்பட 26 சம்பவங்கள் தொடர்பான நட்டம் ரூபா 35,144,088 ஆகவும். 5 முதல் 10 ஆண்டுகளுக்குள் நிலுவையில் உள்ள 65 வாகன விபத்துகள் தொடர்பான நட்டம் ரூபா 14,593,813 ஆகவும். 05 ஆண்டுகளுக்கும் குறைவாகக் காலம் தொட்டு உள்ள 55 வாகன விபத்துகள் உட்பட 56 சம்பவங்கள் தொடர்பான நட்டம் ரூபா 49,743,400 ஆகவும் உள்ளது.	2024 நிதியாண்டிற்குரியதாக 10 ஆண்டுகளுக்கும் மேலான 26 சொத்து மற்றும் வாகன விபத்து நட்டங்களில் (ரூபா 35,144,088) 04 வாகன விபத்துகள் (ரூபா 2,174,631) தொடர்பான நட்டங்களைத் தள்ளுபடி செய்வதற்கு ஒப்புதல் பெற அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், தங்காலை மற்றும் காலி சிறைச்சாலைகளில் நடந்த சொத்து சேதங்கள் (ரூபா 2,697,490) தொடர்பான வழக்குகள் நடைபெற்றுக் கொண்டு இருப்பதால் தள்ளுபடி செய்ய முடியவில்லை. மீதமுள்ள நட்டங்கள் சேதங்கள் குறித்து நடவடிக்கை எடுக்க ஒரு குழு நியமிக்கப்பட்டு, அக்குழுவின் பரிந்துரைகளைப் பெற்று தள்ளுபடி நடவடிக்கைகள்	நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் செயற்பட வேண்டும்.

மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ)	2021 நவம்பர் 22 ஆம் திகதி இலக்கம் NC-5426 கொண்ட வேன் வண்டி விபத்துக்குள்ளானதுடன், முகவர் நிறுவனம் வாகனத்தைப் பழுதுபார்க்க ரூபா 8,656,243 என மதிப்பிட்டினைச் சமர்ப்பித்திருந்தது. குறித்த காலப்பகுதிக்குள் பழுதுபார்த்துச் சோதனைக்குச் சமர்ப்பிக்க முடியாத காரணத்தால், சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவனம் இந்தக் கோரிக்கையின் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது என்று அறிவித்தது. பின்னர், இந்த வாகனத்திற்காக அதிகபட்சமாக ரூபா 500,000 காப்புறுதி நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டதுடன், பழுதுபார்க்கும் பணி 2025 ஏப்ரல் 30 ஆம் திகதிக்குள் ஒரு தனியார் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் என்றும், பழுதுபார்க்கும் செலவு ரூபா 4,300,000 ஆக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி இந்த வாகன விபத்தினால் ஏற்பட்ட சேதத்தை முழுமையாகக் காப்புறுதி நிறுவனத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளப் பொறுப்பான அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை.	இலக்கம் NC-5426 வேன் விபத்தின் பழுதுபார்க்கும் பணி 2021 நவம்பர் 22 ஆம் திகதி முடிவடையாததால், முழுமையான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. (வாகன விபத்தினால் ஏற்பட்ட சேதத்தை முழுமையாகக் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்காதது குறித்து விசாரணை நடத்தப்பட்டு, மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன).	நிதிப் பிரமாணம் 103, 104 மற்றும் 156(1) இன் பிரகாரம் செயற்பட வேண்டும்.

(இ)	நிதிப் பிரமாணம் 109(1)(அ) இன் படி, சேதத்திலிருந்து மீட்கப்பட வேண்டிய அதிகபட்ச பெறுமதிக்கும், மீட்கத் தீர்மானிக்கப்பட்ட தொகைக்கும் இடையில் ஏதேனும் வேறுபாடு இருந்தால், அந்த வேறுபாட்டைக் கணக்கிலிருந்து நீக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2024 நிதி அறிக்கைகளில் உள்ள ஏடுகளில் இருந்து நீக்கல் அறிக்கையில் (இணைப்பு II) ஆண்டின் போது நிதிப் பிரமாணம் 109 இன் கீழ் ஏடுகளில் இருந்து நீக்கல் மற்றும் அறவீடு செய்தல் தொடர்பான அறிக்கையில் உள்ள 53 விபத்துகள் தொடர்பான ரூபா 4,134,753 நட்ட பெறுமதிக்காக, மேலதிக கட்டணம் மற்றும் காப்புறுதி மூலம் அறவிடப்பட்ட ரூபா 3,681,782 குறித்த தகவல்கள் பதிவு செய்யப்படவில்லை.	எதிர்காலத்தில், அந்தத் தகவல்கள் உரியவாறு நிதி கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுட்டிக் காட்டப்பட்ட நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும்.

4.9 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை

திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட பின்வரும் விபரம் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு ஐயவினாவுக்கு 2025 ஒக்தோபர் 13 ஆந் திகதி வரையிலும் பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்பு		கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட கணக்காய்வு	15	சிறைச்சாலைகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வு	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 38(1)(ந) மற்றும் நிதிப்

ஐயவினாக்களுக்கு 2025 ஒக்தோபர் 13 ஆம் திகதி வரை பதில்கள் அனுப்பப்படவில்லை.	ஐயவினாக்களுக்குப் பதிலளிப்பது, கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் செய்வதற்கு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், பல கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்கள் சிறைச்சாலை நிறுவனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பிற பிரிவுகளிடமிருந்து பெறப்பட்டு, தலைமையகத்தால் பொழிப்பாக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுவதால், அதற்கு குறிப்பிடத்தக்க காலம் எடுக்கும்.	பிரமாணம் 155 இன் பிரகாரம், கணக்காய்வாளர் நாயகத்தினால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு எந்த அதிகாரியினாலும் அனுப்பப்படும் எழுத்துமூல மற்றும் ஐயவினாக்களுக்குத் தாமதமின்றி நடவடிக்கை எடுத்து முழுமையான பதில்களை வழங்க கணக்கீட்டு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.10 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள
(அ) உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க வீடுகளை வழங்குதல் மற்றும் வீட்டு வாடகை அறவிடுதல்		
(i) ஏதேனும் ஒரு அரசாங்க வீடு நிர்மாணிக்கப்படும்போது, தாபனக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 2.3.1 உப பிரிவால் அறிமுகப்படுத்தப்பட்ட மாதிரித் திட்டங்களின்படி நிர்மாணங்களை மேற்கொண்டு, தாபனக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் அந்தந்த தரநிலை	தாபனக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 2.3.1 உப பிரிவின் படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்குப் பொறியியல் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.	தாபனக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 2.3.1 உப பிரிவின் படி செயற்பட வேண்டும்.

	அல்லது பதவியின் படி வீடுகளைத் தரப்படுத்த வேண்டிய போதிலும், அவ்வாறு திட்டமிட்டு நிர்மாணித்தல் மற்றும் தரப்படுத்துதல் மேற்கொள்ளப்படவில்லை.		
(ii)	இரண்டாம் நிலை பதவிகளுக்காக ஒதுக்கப்பட்ட அரசாங்க வீடுகள் மூன்றாம் நிலை பதவிகளை வகிக்கும் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டதால், இரண்டாம் நிலை பதவிகளை வகிக்கும் அதிகாரிகள் வீடுகளைப் பெறுவதில் சிக்கல்களை எதிர்கொண்டனர்.	சில இரண்டாம் நிலை ஜெயிலர் அதிகாரிகளாகப் பதவி உயர்வு பெற்றவர்கள், தங்களுக்குரிய உத்தியோகபூர்வ குடியிருப்புகள் கிடைக்கும் வரை சேவைத் தேவை காரணமாக கனிஷ்ட அதிகாரிகளின் குடியிருப்புகளில் இருப்பதுடன், கடந்த காலத்தில் முதலாம் நிலை ஜெயிலர் அதிகாரிகளின் பதவிகள் அதிகரித்ததால், சேவைத் தேவை காரணமாக இரண்டாம் நிலை ஜெயிலர்களின் சில உத்தியோகபூர்வ குடியிருப்புகள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டியிருந்தது.	ஒவ்வொரு பதவிக்கும் ஒதுக்கப்பட்ட அரச குடியிருப்புகளை அந்தப் பதவிகளை வகிக்கும் அதிகாரிகளுக்கு மட்டுமே வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iii)	கட்டுப்படுத்துபவர்கள் மற்றும் சார்ஜன்ட்களுக்காக ஒதுக்கப்பட்ட B கட்டிடம் மற்றும் C மற்றும் D அடுக்குமாடி குடியிருப்புகள் காலத்திற்குக் காலம் பழுதுபார்க்கப்படாததால் மோசமடைந்து வருகின்றன என்பதும், கட்டுப்படுத்துபவர்கள் மற்றும் சார்ஜன்ட்களின் வரிசைக் குடியிருப்புத் தொகுதி மிகவும் சேதமடைந்த மற்றும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது என்பதும், அதன் சுற்றியுள்ள	மேலும், இந்தக் கட்டடங்களில் பழுதுபார்க்கும் பணிகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட உள்ளன. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வரிசைக் குடியிருப்புகளைப் பழுதுபார்ப்பதை விட அகற்றிவிட்டுப் புதிதாகக் கட்டுவது மிகவும் பொருத்தமானதாக இருப்பதுடன், அந்தப் பணிகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.	பழுதுபார்க்கப்பட வேண்டிய அரச குடியிருப்புகளை அடையாளம் கண்டு விரைவில் பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	சூழலும் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், அந்தக் குடியிருப்புகள் மனிதர்கள் வாழத் தகுதியற்றவை என்பதும், ஜெயிலர்களுக்காக ஒதுக்கப்பட்ட மிகவும் பழைய குடியிருப்புகளை விரைவில் பழுதுபார்க்க வேண்டியதாக உள்ளது.		
(ஆ)	15 நாடுகளுடன் கைதிகளை மாற்றுவதற்கான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படாததால், அந்தக் கைதிகளை அந்த நாடுகளிடம் ஒப்படைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதுடன், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சிறைச்சாலையில் உள்ள 170 வெளிநாட்டுக் கைதிகளுக்கு அவரவர் நாடுகளின் உணவு முறைக்கு ஏற்றவாறு உணவுகளை வழங்க வேண்டியுள்ளதால், கூடுதல் செலவு செய்ய வேண்டியுள்ளது. சிறைச்சாலை நிறுவனங்களின் கைதித் தங்கும் கொள்ளளவு அதிகரித்துள்ள நிலையில், வெளிநாட்டுக் கைதிகளை அந்தந்த நாடுகளிடம் ஒப்படைப்பதன் மூலம் இந்தக் எண்ணிக்கையினைக் குறைத்துச் சிறைச்சாலை நெரிசலைக் குறைக்க முடியும்.	எதிர்காலத்தில் இது தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.	வெளிநாட்டுக் கைதிகளை அந்தந்த நாடுகளிடம் ஒப்படைக்க முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	21 சிறைச்சாலை நிறுவனங்களின் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புகள் (Traeatment Plant) மற்றும் கழிவுநீர் அமைப்புகள் (Sewerage system) என்பவற்றைப் பரீட்சித்தபோது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.		
(i)	05 சிறைச்சாலை நிறுவனங்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புகள்	சம்பந்தப்பட்ட சிறைச்சாலை நிறுவனங்களுக்குத்	சிறைச்சாலை நிறுவனங்களில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு

(Traeatment Plant) இருந்தபோதிலும், போகம்பர மற்றும் பூஸ்ஸ சிறைச்சாலைகளில் மட்டுமே அவை செயல்பாட்டு நிலையில் உள்ளன என்பதும், பூஸ்ஸ சிறைச்சாலையின் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பு 2001 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது என்பதால், அதன் இயந்திரங்கள் மற்றும் குழாய் அமைப்புகளை நவீனமயமாக்குவது அவசியம் என்பதுடன், பொலன்னறுவை, அகுணகொலபெலஸ்ஸ, யாழ்ப்பாணம் ஆகிய சிறைச்சாலை நிறுவனங்களிலும், போகம்பர சிறைச்சாலை அதிகாரிகள் குடியிருப்பு மற்றும் பாரக்குகள் சார்ந்த கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புகளும் செயல்பாட்டு நிலையில் இல்லை என்பதும், அகுணகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பு சரியாகச் செயல்படாததாலும், கழிவுப் பொருட்கள் மறுசுழற்சி செய்யப்படாமல் வெளியேற்றப்படுவதாலும் பல சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இந்த அமைப்புகளில் இயந்திரங்கள் மற்றும் நிலத்தடி குழாய் அமைப்புகள் சரியாகச் செயல்படாததால், அசுத்தமான நீர் நேரடியாக வெளிச்சூழலுக்கு வெளியேறுவது போன்ற பிரச்சினைகளால் ஏற்படும் தெரிவித்துத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அமைப்புகளை முறையாகச் சரிசெய்ய விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	சுற்றுச்சூழல் சேதங்களைத் தடுக்க இதுவரை நிலையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.		
(ii)	கேகாலை, அனுராதபுரம், மொணராகலை, வாரியப்பொல, புதிய மாகசின், கொழும்பு விளக்கமறியல் மற்றும் வெலிக்கடை ஆகிய சிறைச்சாலை நிறுவனங்களில், கழிவுநீர் அமைப்புகளில் உள்ள குழிகள் உடைதல், நிலத்தடி குழாய்கள் உடைதல், கழிவுநீர் அமைப்பு போதுமானதாக இல்லாததால் அடிக்கடி நிரம்பி வழிதல் போன்ற காரணங்களால் பல சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.	சம்பந்தப்பட்ட சிறைச்சாலை நிறுவனங்களுக்குத் தெரிவித்துத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.	சிறைச்சாலை நிறுவனங்களில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புகளை முறையாகச் சரிசெய்ய விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iii)	கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புகள் மற்றும் கழிவுநீர் அமைப்புகள் உள்ள பல சிறைச்சாலை நிறுவனங்களினால் பெரிய சுற்றுச்சூழல் சேதம் ஏற்படுகிறது என்பதும், அதற்காக இதுவரை நிலையான முறையான தீர்வு கிடைக்கவில்லை.	சம்பந்தப்பட்ட சிறைச்சாலை நிறுவனங்கள் மற்றும் பொறியியல் பிரிவுடன் கலந்துரையாடி, கழிவுநீர் அமைப்பில் உள்ள குறைபாடுகளை விரைவில் உரியவாறு சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.	கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பைச் சரிசெய்து சுற்றுச்சூழல் சேதத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	வெலிக்கடை சிறைச்சாலை கைத்தொழில் பிரிவில் நிறுவப்பட்ட பை தயாரிப்பு செயற்திட்டத்தினைப் பீட்சித்த போது பின்வரும் விடயங்கள் தெரியவந்துள்ளன.		
(i)	சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் பை தயாரிக்கும் தனியார் நிறுவனத்திற்கு இடையே 2023 ஏப்ரல் 25 ஆம் திகதி கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தின்படி	கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிட்டுள்ளபடி, 2023 ஜனவரி மாதம் முதல் 2023 செப்டம்பர் மாதம் வரை பழைய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி	புதிய ஒப்பந்தத்தின்படி செயற்பட வேண்டும்.

	செயற்படாமல், பழைய ஒப்பந்தத்தின்படி கைதிகளின் ஊதியம் செலுத்தப்பட்டதால், 2023 ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர் மாதம் வரை கைதிகளுக்கும், அரசுக்கும், கைதிகள் நலன்புரி நிதியத்திற்கும் முறையே ரூபா 1,281,440 மற்றும் ரூபா 2,667,944 குறைவாகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.	கைதி ஊதியம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தனியார் நிறுவனம் 2023 செப்டம்பர் 18 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம், முந்தைய ஒப்பந்தத்தின்படி ஊதியம் வழங்குவதில் நிறுவனம் எதிர்கொண்ட சிரமங்கள் குறித்துக் கூறி, கால அவகாசம் கோரி இருந்ததுடன், அதற்கமைய தோல் பொருட்கள் துறையில் நிலவிய அப்போதைய நிலைமைகள், இந்தத் திட்டம் நீண்டகாலமாக வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படுவது மற்றும் இந்தத் திட்டத்தின் மூலம் கைதிகளின் புனர்வாழ்வுக்கு ஏற்படும் பங்களிப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, எனது இலக்கம் சிறை/த.அ/புன/பி.ஜி மார்ட்டின்/2023 கொண்டதும் 2023 ஒக்தோபர் 11 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் கால அவகாசம் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.	
(ii)	சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் பை தயாரிப்பு தனியார் நிறுவனத்திற்கு இடையேயான புதிய ஒப்பந்தத்தின் 23 ஆம் பிரிவின்படி, அரசாங்க வருமானத்திற்கும், கைதிகள் நலன்புரி நிதிக்கும் செலுத்த வேண்டிய தொகையைத் தனித்தனி காசோலைகள் மூலம் அடுத்த மாதம் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்	ஒப்பந்தத்தின் இல. 24 மற்றும் 25 பிரிவுகளின்படி தாமதக் கட்டணம் அறவிடுவதில் தெளிவின்மை அவதானிக்கப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி, அடுத்த இரண்டு மாதங்களுக்குள் ஒப்பந்தத்தில் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துக்	ஒப்பந்தத்தின்படி தாமதக் கட்டணங்களை அறவிட முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	புனர்வாழ்வுப் பிரிவுக்குச் சமர்ப்பிக்க வேண்டி இருந்த போதிலும், அவ்வாறு குறித்த திகதியில் செலுத்தத் தவறினால், புதிய ஒப்பந்தத்தின் 25 ஆம் பிரிவின்படி, அரச கட்டணமாக 10 சதவீத தாமதக் கட்டணம் அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட வேண்டியதுடன், அது அதிகபட்சமாக 07 நாட்களுக்குள் உட்பட்டிருக்க வேண்டிய போதிலும், 2025 ஜனவரி முதல் மே மாதம் வரையிலான கொடுப்பனவுகளைப் பரீட்சித்தபோது, 19 முதல் 88 நாட்கள் வரை தாமதம் இருந்தபோதிலும், தாமதக் கட்டணங்கள் செலுத்தப்படவில்லை.	கொள்கிறேன்.	
(iii)	குடியிருப்பாளர்கள் விடுவிக்கப்பட்ட பிறகு இந்தத் தொழிலுடன் தொடர்புடைய தொழில்களில் ஈடுபடுவதற்கு வசதியாக நிறுவனத்திடமிருந்து முறையான சான்றிதழ் வழங்க திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை.	இது தொடர்பாகத் தனியார் நிறுவனத்துடன் கலந்துரையாடிச் சான்றிதழ் வழங்குவது குறித்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.	பயிற்சிக்குப் பிறகு முறையான சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	நாட்டின் எந்தவொரு நீதிமன்றத்தின் அதிகாரத்தின் கீழும் சிறைப்படுத்தப்பட்ட அல்லது விளக்கமறியலில் வைக்கப்பட்ட அனைத்து மட்டத்தைச் சேர்ந்த கைதிகளுக்கும் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பைச் சிறைச்சாலைச் சட்ட விதிகளின்படி வழங்குவதும், அவர்களைப் புனர்வாழ்வளித்துச் சிறந்த	இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் கலந்துரையாடி, நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.	கைதிகள் தப்பிச் செல்வதை / வெளியேறுவதைத் தடுக்க முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குடிமக்களாகச் சமூகத்தில் சேர்ப்பதும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பணியாகும் என்பதும், தண்டனைக் காலம் முடிவடைவதற்கு முன்னர் சட்டவிரோதமாகத் தப்பிச் சென்ற / வெளியேறிய கைதிகள் அல்லது சந்தேக நபர்களின் எண்ணிக்கை கடந்த 06 ஆண்டு காலப் பகுதியில் 995 ஆகும், மேலும் மீண்டும் கைது செய்யப்படாதவர்களின் எண்ணிக்கை 554 ஆகும்.

(ஊ) சிறைச்சாலைகள் திணைக்களத்தில் CCTV கெமெராக்கள் தொடர்பான பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) 2024 ஜுன் 31 ஆம் திகதி வரை 14 சிறைச்சாலை நிறுவனங்களில் 792 CCTV கமெராக்கள் நிறுவப்பட்டிருந்ததுடன், அவற்றில் 458 கமெராக்கள் மட்டுமே செயல்பாட்டு நிலையில் உள்ளதுடன், 334 கமெராக்கள் அதாவது 42 சதவீதம் செயலிழந்த நிலையில் உள்ளன. கணக்காய்வுக்கு வழங்கப்பட்ட தகவலின்படி, செயலிழந்த CCTV கமெராக்கள் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக செயலிழந்த நிலையில் இருப்பது தெரிய வந்ததனால், சிறைச்சாலைகள் திணைக்களம் CCTV கமெராக்களை நிறுவுவதன் முக்கிய நோக்கத்தை அடைவது சவாலாக உள்ளது.	இந்தக் காரியங்களுக்காக இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.	அனைத்துச் சிறைச்சாலை நிறுவனங்களுக்கும் செயலில் உள்ள CCTV கமெரா அமைப்பு அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

(ii)	2023 ஜூன் 09 ஆம் திகதி நடைபெற்ற அரச கணக்குகள் தொடர்பான செயற்குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட உத்தரவுகளின்படி, கைதிகளுக்குப் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு வழங்குவது மற்றும் அவர்களைப் புனர்வாழ்வளித்துச் சமூகத்தில் சேர்ப்பது தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கையின் பரிந்துரைகளைச் செயல்படுத்தலுக்கான செயல் திட்டத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட சிறைச்சாலை நிறுவனங்களுக்குத் தேவையான நவீன தொழில்நுட்பப் பாதுகாப்பு உபகரணங்களைப் பெறுவதற்கான திட்ட முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இந்த அனைத்துப் பாதுகாப்பு உபகரணங்களையும் பராமரிக்கவும் இயக்கவும் போதுமான தொழில்நுட்ப அறிவுள்ள தொழில்நுட்பத் தலைவர் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்ட ஒரு தொழில்நுட்பப் பிரிவை உருவாக்குவது அவசியம் என்று குழுப் பரிந்துரையாக முன்வைக்கப்பட்டபோதும், அதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	தற்போது அதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவுள்ள அதிகாரிகளை நியமிக்கவும், தேவையான பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.	அரச கணக்குகள் செயற்குழுவின் உத்தரவுகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(எ)	18 சிறைச்சாலை நிறுவனங்களில் 2024 ஆம் ஆண்டின் முதல் 07 மாதங்களில் புகையிலை, ஹெரோயின், ஐஸ், கஞ்சா, ஹேஷ் மற்றும் போதை	இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	தடைசெய்யப்பட்ட போதைப்பொருட்கள் சிறைச்சாலைக் கைதிகளுக்குக் கிடைப்பதைத் தடுக்க முறையான நடவடிக்கை

மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இந்தத் தடைசெய்யப்பட்ட போதைப் பொருட்கள் சிறைச்சாலைக் கைதிகளுக்குக் கிடைப்பதைத் தடுக்க முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன் இந்த நிலைமை முறையான புனர்வாழ்வுச் செயல்பாட்டிற்குத் தடையாக இருந்தது.		எடுக்க வேண்டும்.
(ஏ) சிறைச்சாலைகள் திணைக்களத்தின் கைத்தொழில் பிரிவின் அபிவிருத்தி தொடர்பான பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.		
(i) சிறைச்சாலை நிறுவனங்களின் கைத்தொழில் பிரிவுகளில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்குப் பாதுகாப்பு உபகரணங்கள் போதுமான அளவில் இல்லாமை, புதிய தொழில்நுட்ப முறைகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் இல்லாமை, இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு தொடர்பான சிக்கல்கள், அனைத்துத் தொழில் ஆலோசகர்கள் / விவசாய ஆலோசகர்கள் உரிய சம்பள மட்டத்தில் நிலைநிறுத்தப்படாமை, சம்பந்தப்பட்ட துறையின்படி தொழில் பயிற்சி அமர்வுகள் நடத்தப்படாமை, வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாமை, தொழில் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளப்	இதற்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் பிற தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	கைத்தொழில் பிரிவில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் தொழில்முறை சிக்கல்களுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	போதுமான இடவசதியுள்ள கட்டடங்கள் மற்றும் மூலப்பொருட்கள் இருப்பு பேணப்படாமை, கைத்தொழில் பணித் தலைவர் பதவிக்கு மேல் பதவி இல்லாமை, வெளிப்புறப் பணிகளுக்காகக் கைதிகளை அழைத்துச் செல்ல போதுமான அதிகாரிகள் இல்லாமை மற்றும் கடமைகளைச் செய்வதில் இலக்குத் திட்டம் இல்லாமை போன்ற தொழில்முறை சிக்கல்கள் இருந்தன.		
(ii)	நிலவும் நிதிச் சிக்கல்கள், போதுமான கைதிகள் ஈடுபடுத்தப்படாமை மற்றும் மூலப்பொருட்களின் பற்றாக்குறை போன்ற காரணங்களால், 2024 செப்டெம்பர் 02 ஆம் திகதி தொடக்கம் 06 ஆம் திகதி வரையான 05 நாட்களுக்குள் 15 சிறைச்சாலை நிறுவனங்களின் 62 தொழில் பிரிவுகளில் சேவைக்கு ஈடுபடுத்தக்கூடிய கைதிகளின் எண்ணிக்கை 11,434 ஆக இருந்த போதிலும், சேவையில் ஈடுபடுத்தப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை 6,013 மட்டுமேயானதன் மூலம் 5,421 கைதிகள் தொழில் பிரிவின் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.	தொழில் பிரிவின் சேவைக்காக ஈடுபடுத்தப்படாத 5,421 கைதிகளுக்குள் வீட்டு வேலைகளில் உள்ள கைதிகள், விசேட தரக் கைதிகள், குறுகிய காலக் கைதிகள், மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் ஆகியோர் அடங்குவர். எனவே, அவர்கள் தொழில் பிரிவின் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை.	தொழில் பிரிவில் சேவைக்காக அதிக எண்ணிக்கையிலான கைதிகளை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(iii)	08 சிறைச்சாலை நிறுவனங்களில் சீமெந்துக் கல் உற்பத்தி, கொல்லர் பிரிவு, தச்சுத் தொழில், மர அறுவைப்பிரிவு, வாகன சேவைப் பிரிவு, பேக்கரிப் பிரிவு, தேங்காய் மட்டை பிரிவு மற்றும் பூச்சட்டிப் பிரிவு ஆகிய தொழில் பிரிவுகள் செயலிழந்த நிலையில் இருப்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த நிறுவனங்களால் அடையாளம் காணப்பட்ட காரணங்களுக்கான தேவையான தீர்வுகளை மேற்கொண்டு, அந்தத் தொழில் உற்பத்திப் பிரிவுகளை மீண்டும் தாபிப்பதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்தப் பிரிவுகளுக்கு ஈடுபடுத்துவதற்கு கைதிகள் எண்ணிக்கை குறைவாக உள்ளதுடன், ரிமான்ட் கைதிகளை ஈடுபடுத்தவும் முடியாது. இருப்பினும், சாத்தியமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தயவுடன் அறியத்தருகிறேன்.	இந்தக் கைத்தொழில் பிரிவுகளை மீண்டும் செயலுறச் செய்து, உற்பத்திச் செயல்முறை மூலம் கைதிகளைப் புனர்வாழ்வு அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(iv)	சிறைச்சாலை நிறுவனங்களின் கைத்தொழில் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் வழிமுறைகளை பரீடசித்தபோது, பூஸ்ஸ, கொழும்பு ரிமான்ட், பதுளை, காலி, குருவிட்ட மற்றும் அகுணகொலபெலஸ்ஸ ஆகிய சிறைச்சாலை நிறுவனங்களில் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு அந்தச் சிறைச்சாலைகளுக்குள் விற்பனை நிலையங்கள் தாபிக்கப்படவில்லை என்றும், விற்பனை நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ள போகம்பர, வட்டரெக்க, அனுராதபுரம், பல்லேகல, வெலிக்கடை, வீரவில மற்றும் தல்தென ஆகிய	தற்போது, தொழில்சார் தகைமைகளைக் கருத்திற்கொண்டு அதற்குரிய சான்றிதழை வழங்கி இது தொடர்பான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று அறிவிக்கிறேன்.	கைத்தொழில் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காக அனைத்துச் சிறைச்சாலை நிறுவனங்களிலும் விற்பனை நிலையங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	சிறைச்சாலை நிறுவனங்களில் அந்த விற்பனை நிலையங்களில் இடவசதி போதுமானதாக இல்லை என்றும் கண்டறியப்பட்டது.		
(v)	சிறைச்சாலை நிறுவனங்களின் ஒவ்வொரு கைத்தொழில் பிரிவுகளுக்கும் தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களில் பற்றாக்குறைகள் காணப்பட்டதோடு, அந்த நிறுவனங்களின் உகந்த உற்பத்திச் செயல்முறைக்குப் பங்களிக்க 10 சிறைச்சாலை நிறுவனங்களில் 227 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் தேவை உள்ளது என்று தெரியவந்தது.	இது தொடர்பாக அனைத்துச் சிறைச்சாலை நிறுவனங்களிலும் இயந்திர உபகரணங்கள் தொடர்பான கணக்கெடுப்பு ஒன்றை நடத்தி முன்னுரிமையின் அடிப்படையில் ஒவ்வொரு சிறைச்சாலை நிறுவனங்களுக்கும் தேவையான இயந்திர உபகரணங்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன.	தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(vi)	சிறைச்சாலை திணைக்களத்தின் முக்கிய பணிகளில் ஒன்றான, காலத்தின் தேவைக்கேற்பக் கைதிகளைப் புனர்வாழ்வு அளித்து நல்ல குடிமக்களாகச் சமூகமயப்படுத்துவதற்கான பின்னணியை உருவாக்குவதற்கு, சிறைச்சாலை நிறுவனங்களில் உள்ள கைத்தொழில் பிரிவுகளில் தொழில் பயிற்சியைப் பெற்றுப் புனர்வாழ்வு பெறும் கைதிகளுக்கு அந்தப் பயிற்சிக்குப் பிறகு NVQ சான்றிதழ்களை வழங்கும் ஒரு முறையான வேலைத்திட்டம்	இது தொடர்பாக அனைத்துச் சிறைச்சாலை அத்தியட்சகர்களுக்கும் அறிவிக்கப்பட்டு, தேவையான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.	கைதிகளைப் புனர்வாழ்வு அளித்து நல்ல குடிமக்களாகச் சமூகமயப்படுத்தத் தேவையான பின்னணியை உருவாக்க வேண்டும்.

	பேணப்படுவதன் மூலம், அந்தக் கைதிகள் சமூகத்தில் இணையும்போது ஒரு சுயாதீனத் தொழிலுக்குச் செல்வதற்கு வாய்ப்பு உள்ளது என்றும், அதன் மூலம் கைதிகள் மீண்டும் சிறைக்குச் செல்வதைத் தடுத்து, வருடாந்தம் செலவிடப்படும் பணத்தைச் சேமித்து, இந்தக் கைதிகளை நாட்டுக்குப் பயனுள்ள நபர்களாக மாற்ற முடியும் என்றும், அதற்கான முறையான பொது வேலைத்திட்டம் சிறைச்சாலை திணைக்களத்தால் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் கண்டறியப்பட்டது.		
(ஐ)	கைதிகளைப் பார்க்க வரும் நபர்களால் வெளியேற்றப்படும் பிளாஸ்டிக் போத்தல்களை விற்பதற்கான வழிமுறையொன்று இல்லாததுடன், மீதமுள்ள தேங்காய்ச் சிரட்டைகளைச் சிரட்டைக் கரியாக மாற்றுவதன் மூலமும், சிரட்டைகளை விற்பதன் மூலமும் வருமானம் ஈட்ட முடியும் என்ற போதிலும், சுமார் 06 சிறைச்சாலை நிறுவனங்கள் மட்டுமே அத்தகைய வழிமுறையை ஏற்படுத்தி உள்ளன என்றும், சிறைச்சாலை நிறுவனங்களில் இருந்து வெளியேற்றப்படும் உணவு எச்சங்கள் மற்றும் பிற கழிவுகளைப் பயன்படுத்தி கொம்போஸ்ட உரக் கலவை தயாரிக்கும் செயற்திட்டத்தைத் தொடங்கி மேலதிக விற்பனை வருமானத்தை ஈட்ட முடியும் என்ற போதிலும், 04 சிறைச்சாலைகள் தவிர ஏனைய சிறைச்சாலைகளில்	சிறைச்சாலைகளுக்குள் உள்ள இடப்பற்றாக்குறை போன்ற சிக்கல்களையும் கருத்திற்கொண்டு, இந்த வழிமுறைகளைச் செயல்படுத்துவதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் சிறைச்சாலை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.	கழிவு முகாமைத்துவம் மூலம் மேலதிக வருமானத்தை ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அத்தகைய வழிமுறை இல்லை என்றும் கண்டறியப்பட்டது.

(ஓ) சிறைச்சாலைகளில் இருந்து சிறுவர் சந்தேக நபர்களைச் சிறுவர் இல்லங்களுக்கு அனுப்ப வேண்டிய சந்தர்ப்பங்களிலும், மருத்துவமனை பாதுகாப்பு மற்றும் நீதிமன்ற உத்தரவுகளின்படி மறுநாள் பிற நீதிமன்றங்களில் ஆஜர்படுத்துவதற்காக (AR) உத்தரவிடப்பட்ட ஓன்றோ அல்லது இரண்டு மூன்று கைதிகளை மட்டும் சம்பந்தப்பட்ட சிறைச்சாலைகளுக்கோ அல்லது நீதிமன்றங்களுக்கோ அழைத்துச் செல்ல வேண்டிய சந்தர்ப்பங்களிலும் சிறைச்சாலை பேருந்துகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளமை, போக்குவரத்து செலவுகள் அதிகமாக உள்ளன என்பதும், இந்தப் பாதுகாப்பு கடமைகளுக்கு எரிபொருள் செலவு குறைந்த ஒரு வாகனத்தைப் (வேன் வண்டி) பயன்படுத்துவதன் மூலமும், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்துடன் இணைந்து சிறுவர் சந்தேக நபர்கள் தொடர்பாகச் செயற்படுவதன் மூலமும் எரிபொருள் செலவைக் குறைக்க முடியும். பொலன்னறுவை சிறைச்சாலையினால் 2024 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் 150 கிலோ மீட்டர் மற்றும் அதற்கு மேற்பட்ட தூரமுள்ள பாதுகாப்பு கடமைகளுக்கு 25 தடவைகள் பேருந்துகள் பயன்படுத்தப்பட்டபோது, 6,737 கிலோ மீட்டர் தூரத்திற்கான எரிபொருள் செலவாக ரூபா 432,604 செலவிடப்பட்டுள்ளது.

செயல்பாடு சிறைச்சாலை திணைக்களத்துடன் தொடர்புடையதல்ல என்பதுடன், மாறாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்துடன் தொடர்புடையது ஆகும். ஆயினும், எதிர்காலத்தில் கைதிகளை ஏற்றிச் செல்ல சுமார் 10 வேன்களைக் கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ளதுடன், சந்தர்ப்பத்திற்கேற்ப, மேற்கண்ட நடவடிக்கைகளுக்குத் தேவைக்கேற்ப வாகன வசதிகளை வழங்குவது குறித்துக் கவனத்திற் கொள்ள முடியும் என்பதைத் தயவுடன் அறியத்தருகிறேன்.

பாதுகாப்புக் கடமை நடவடிக்கைகளின் போது செலவின முகாமைத்துவத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஓ)	2019 மார்ச் 29 மற்றும் 2023 ஜூன் 09 ஆம் திகதிகளில் நடைபெற்ற அரச கணக்குகள் செயற்குழுவினால் வழங்கப்பட்ட உத்தரவுகளின்படி, 1877 இன் 16 ஆம் இலக்க சிறைச்சாலை கட்டளைச் சட்டத்திற்குப் பதிலாகப் புதிய சட்டத்தைத் தயாரிக்கும் பணிகள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நிறைவு செய்யப்படவில்லை.	தற்போது புதிய சட்டத்தைத் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதை அறியத்தருகிறேன்.	புதிய சட்டத்தைத் தயாரிக்கும் பணிகளைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஔ)	1974 ஜூன் 07 ஆம் திகதியிடப்பட்ட சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் இலக்கம் 634 கொண்ட சுற்றறிக்கையின்படி, 02 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு தண்டனை பெற்று, தண்டனைக் காலத்தில் ஒரு வருடத்திற்கும் குறைவான காலம் எஞ்சியிருக்கும் கைதிகளை வேலை நிவாரணத் முறையின் கீழ் நிறுவனங்களில் சேவையில் ஈடுபடுத்துவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்ட போதிலும், 2024 ஆம் ஆண்டில் 02 சிறைச்சாலை நிறுவனங்களில் இருந்து 162 கைதிகள் 03 அரச நிறுவனங்களில் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டு ஈட்டப்பட்ட வருமானத்தில் ரூபா 278,572 அரச வருமானத்திற்கும், ரூபா 1,392,860 கைதிகளின் ஊதியமாகவும், ரூபா 139,286 கைதிகள் நலன்புரி நிதியத்திற்கும் வரவு வைக்கப்பட்டுள்ளது. அத்துடன், குறுகிய காலத் திட்டத்தின் கீழ் ஒரு வருடம் அல்லது அதற்கும் குறைவான காலத்திற்குச் சிறையிலடைக்கப்பட்டவர்களைச் சேவையில்	தற்போது சிறையிலடைக்கப்படும் கைதிகளில் பெரும்பாலோர் குறுகிய காலக் கைதிகள் என்பதால், அத்துடன் 1997 மே 16 ஆம் திகதியிடப்பட்ட சிறைச்சாலைகள் ஆணையாளர் சுற்றறிக்கை 31/77 இன் பிரகாரம் தகுதியுடைய கைதிகள் நிறுவனங்களில் இல்லாததாலும் இது ஏற்படுகிறது என்று அறிக்கையிடுகிறேன். வேலை நிவாரணச் சேவையின் கீழ் கைதிகளின் சேவையைப் பெற்றுக்கொள்ள அந்த நிறுவனங்கள் கோரிக்கை விடுக்க வேண்டும். இது தொடர்பாக 2023 ஜூன் 12 ஆம் திகதியிட்ட தினமின பத்திரிகை அறிவிப்புகளும் வெளியிடப்பட்டிருந்த போதிலும், சில நிறுவனங்கள் மட்டுமே அத்தகைய கோரிக்கைகளை விடுத்துள்ளன.	வேலை நிவாரணத் முறைமை மற்றும் குறுகிய காலத் திட்டம் தொடர்பான சுற்றறிக்கைகளை இற்றைப்படுத்தி அந்த வழிமுறைகளைச் செயலுறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	ஈடுபடுத்துவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அனைத்துச் சிறைச்சாலைகளும் இணைந்து அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் கைதிகளைச் சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் சிறைச்சாலை நெரிசலைக் குறைப்பதுடன், கைதிகளுக்கான புனர்வாழ்வுத் திட்டமாகவும் இதைப் பயன்படுத்த முடியும் என்ற சாத்தியக்கூறு இருந்த போதிலும், இந்த இரு திட்டங்களின் கீழும் கைதிகள் முறையாக வெளிச் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை.		
(க)	2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று சிறைச்சாலை திணைக்களத்தில் கைதிகள் / சந்தேக நபர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட கொள்ளளவு 10,395 ஆக இருந்த போதிலும், அன்றைய தினத்தில் உண்மையான கொள்ளளவு 28,278 ஆக இருந்தது. இதனால் 17,883 கைதிகள் கொள்ளளவை மீறிச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், இது 272 சதவீத அதிகரிப்பைக் காட்டுகிறது. அத்துடன், 2025 மே 29 ஆம் திகதியன்று கொழும்பு ரிமான்ட் சிறைச்சாலையில் தங்க வைக்கக்கூடிய கைதிகளின் கொள்ளளவு 465 ஆக இருந்த போதிலும், அன்றைய தினத்தில் உண்மையான கொள்ளளவு 2,206 ஆக இருந்ததனால் 1,741 கைதிகள் கொள்ளளவை மீறித் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், இது 474 சதவீதத்தை எட்டியுள்ளது.	அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஐக்கிய நாடுகளின் தரநிலைகள் மற்றும் சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தின் விதிகளுக்கு அமையக் கைதிகள் மற்றும் சந்தேக நபர்களைத் தடுத்து வைக்கும் கோட்பாடுகளைப் பாதுகாப்பதற்கும், வகைப்பாடுகளுக்கு ஏற்பத் தடுத்து வைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உச்சபட்ச முயற்சி எடுக்கப்படுவதாகக் கணக்காய்வுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், வேறு நீதிமன்ற நடவடிக்கைகளைக் கொண்ட கைதிகள் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்துவதற்கான வசதிக்காக அந்த நீதிமன்றங்களுக்கு அருகிலுள்ள சிறைச்சாலைகளில்	சிறைச்சாலைகளில் உண்மையான கொள்ளளவை அதிகரிப்பதற்காகக் கட்டிட வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

		தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதனால், இடவசதியுள்ள வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றுவது மேலதிக செலவை ஏற்படுத்தும் என்பதனால் அவ்வாறு செய்யப்படவில்லை என்றும் மேலும் அறிவிக்கிறேன்.	
(ஞ)	சிறைச்சாலை திணைக்களத்தின் வாகனப் பயன்பாடு தொடர்பான பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.		
(i)	2024 திசெம்பர் 31 ஆம் திகதியில், 07 சிறைச்சாலை நிறுவனங்களில் 08 வாகனங்கள் மூன்றாம் தரப்புக் காப்புறுதி கூடச் செய்யாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.	இது தொடர்பாகக் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.	மோட்டார் வாகனச் சட்டத்தின்படி அனைத்து வாகனங்களுக்கும் காப்புறுதி செய்து ஓட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii)	கணக்காய்வினால் மேற்கொண்ட மாதிரிப் பரீட்சிப்பிற்கமைய, 11 சிறைச்சாலை நிறுவனங்களில் உள்ள 26 வாகனங்கள் தற்போது பயன்படுத்தப்பட்டாலும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை புகை வெளியேற்றச் சான்றிதழ் பெறப்படவில்லை.	இந்தக் குறைகளைச் சரிசெய்யத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அறிவிக்கிறேன்.	அனைத்து வாகனங்களுக்கும் புகை வெளியேற்றச் சான்றிதழைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iii)	அனுராதபுரம், யாழ்ப்பாணம், வெலிக்கடை, மொனராகலை, குருவிட்ட, மாத்தறை மற்றும் வீரவில ஆகிய 07 சிறைச்சாலை நிறுவனங்களில் உள்ள 20 வாகனங்களின் மைலோ மீட்டர்கள் 2024	இந்தக் குறைகளைச் சரிசெய்யத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அறிவிக்கிறேன்.	செயலிழந்த மைலோ மீட்டர்களைப் பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		திசெம்பர் 31 ஆம் திகதி வரை செயல்படும் நிலையில் இருக்கவில்லை.		
	(iv)	சிறைச்சாலை திணைக்களம் வேறு அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான 14 மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்துவதுடன், இந்த மோட்டார் வாகனங்கள் 2025 ஏப்ரல் 28 ஆம் திகதி வரை கையகப்படுத்தப்படவில்லை.	இந்தக் குறைகளைச் சரிசெய்யத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அறிவிக்கிறேன்.	சிறைச்சாலைக்குச் சொந்தமான வாகனங்களை முறையான வகையில் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ச)		போதைப்பொருள் குற்றங்கள் அதிகரிப்பது நாட்டின் பிற குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கு நேரடியாகப் பங்களிப்பதுடன், போதைப்பொருள் குற்றவாளிகளில் பெரும்பாலானோர் போதைப்பொருள் பயன்பாடு, வைத்திருத்தல், வாங்குதல், விற்றல் போன்றவற்றுக்காகச் சிறையிலடைக்கப்பட்டவர்கள் ஆவர். அவர்கள் ஏதேனும் ஒரு வழியில் தேவையான போதைப் பொருளைப் பெற முயல்வதைத் தடுக்கச் சிறைச்சாலை அதிகாரிகள் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளதால், சிறைச்சாலையின் முக்கிய நோக்கங்களை அடைவதற்கும், சிறைச்சாலையின் பாதுகாப்பு, அதிகாரிகளின் பாதுகாப்பு மற்றும் செயல்பாட்டிற்கும் இது தடையாக உள்ளது. 2024 ஆம் ஆண்டில் இலங்கையில் போதைப்பொருள் குற்றங்களுக்காகச் சிறையிலடைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 31,314 ஆக இருந்ததுடன், சந்தேக நபர்களின் எண்ணிக்கை	இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட ஏனைய வெளி நிறுவனங்களுடன் இணைந்து கலந்துரையாடித் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.	காலத்தின் தேவைக்கேற்பக் கைதிகள் நல்ல குடிமக்களாக வெளியேறுவதற்குத் தேவையான சமூகப் பின்னணியை உருவாக்குவது திணைக்களத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாகும் என்பதால், அது தொடர்பான அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து முறையான வகையில் செயற்பட வேண்டும்.

67,117 ஆக இருந்தது. 2024 ஆம் ஆண்டில் சிறைச்சாலைகளுக்கு நேரடியாகச் சேர்க்கப்பட்டவர்களில் 65.5 சதவீதமானோர் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பான கைதிகள் ஆவர்.

(ஞ) நச்சுப் போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களைப் புனர்வாழ்வு அளிப்பதற்காகப் புனர்வாழ்வு பணியகத்தால் நடத்தப்படும் கந்தகாடு, சேனாபுர மற்றும் வவுனியா சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு மையங்களில் 1,120 பேருக்குப் புனர்வாழ்வு அளிக்க முடியும் என்றபோதிலும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி கொள்ளளவுப் பயன்பாடு 262 ஆக மட்டுமே இருந்தது. இதனால் மேலும் 858 பேருக்கு இந்த மையங்களில் வசதிகள் இருந்தும், இந்த நிலையங்கள் குறைந்த பயன்பாட்டுடன் இருந்தன. அத்துடன், 2024 ஆம் ஆண்டில் இந்தக் 03 நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை 642 என்ற அளவில் குறைவாக இருந்ததுடன், சிறைச்சாலை நெரிசலுக்குத் தீர்வாகவும், போதைப்பொருட்களுக்கு அடிமையான கைதிகளைப் புனர்வாழ்வு அளித்துச் சமூகமயப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குவதற்காகவும், நீதிமன்றம் நேரடியாக இந்த மையங்களுக்கு அனுப்புவதற்குத் தேவையான பின்னணியைச் சிறைச்சாலை திணைக்களம், நீதிச் சேவை ஆணைக்குழு மற்றும் நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு இணைந்து

இது நீதிமன்ற உத்தரவுகளின் அடிப்படையில் நீதிமன்றத்தால் மேற்கொள்ளப்படும் ஒரு செயல்முறையாகும். எதிர்காலத்தில் இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடித் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கிறேன்.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடிப் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பிச் சிறைச்சாலை நெரிசலைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	உருவாக்க வேண்டிய தேவை இருந்தபோதிலும், அந்த நிறுவனங்கள் அவ்வாறு செயற்படவில்லை.		
(ட)	கைதிகளை முறையாகப் புனர்வாழ்வு அளிக்க முடியாதபோது, அவர்கள் மீண்டும் மீண்டும் சிறையிலடைக்கப்படுவதுடன், அவர்களில் பெரும்பாலோர் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்கள் என்பதால், அவர்களுக்குச் சரியான சிகிச்சை மற்றும் புனர்வாழ்வுத் திட்டங்கள் செயல்படுத்தப்படாததால், மீண்டும் போதைப் பொருட்களைப் பயன்படுத்திச் சிறையிலடைக்கப்படுகிறார்கள். 2024 ஆம் ஆண்டில் சிறைச்சாலைகளுக்கு நேரடியாகச் சேர்க்கப்பட்டவர்களில் மீண்டும் மீண்டும் சிறையிலடைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 34,488 ஆக உள்ளதுடன், அவர்களைக் கண்டறியச் சிறைச்சாலையிடம் முறையான வழிமுறை கூட இல்லை என்பதும், தற்போது மீண்டும் மீண்டும் சிறையிலடைக்கப்படும் கைதிகள் அவர்களால் வழங்கப்படும் வாய்மொழித் தகவலின் அடிப்படையிலேயே அடையாளம் காணப்படுகிறார்கள் என்பதும் தெரியவந்துள்ளது.	மீண்டும் மீண்டும் சிறையிலடைக்கப்படும் நபர்களைச் சரியாக அடையாளம் காண்பதற்காக, உயிரியளவியல் ஒழுங்கமைப்புகளைச் செயல்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.	சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ அமைப்பு (PIMS) மூலம் இந்தத் தகவல்களைப் இற்றைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ண)	அரச உத்தியோகத்தர்களின் முற்பண "பி" கணக்கு தொடர்பான பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.		
(i)	முற்பண "பி" கணக்கின் இணக்கக்கூற்றின்படி, 2024 ஜனவரி 01 ஆம்	இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள்	நிலுவையில் உள்ள கடன் மீதியை அறவிட முறையான நடவடிக்கைகள்

	திகதி அன்று அறவிடப்பட வேண்டிய தனிப்பட்ட மீதிகளின் மொத்த பெறுமதி ரூபா 209,504,062 ஆகும். இதில், திணைக்களத்தில் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய கடன் மீதியைத் தவிர, 231 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவையில் உள்ள கடன் மீதி ரூபா 10,782,944 ஆக உள்ளதுடன், அதில் 2024 ஆம் ஆண்டில் 106 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 4,572,791 நிலுவையில் உள்ள கடன் மீதி அறவிடப்பட்டுள்ளதுடன், 2024 ஆம் ஆண்டில் 71 உத்தியோகத்தர்களின் ரூபா 3,548,024 பெறுமதியான நிலுவையில் உள்ள கடன் மீதி புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. அதன்படி, வருட இறுதியில் மேலும் 196 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 9,758,177 நிலுவையில் உள்ள கடன் மீதி அறவிடப்பட வேண்டியிருந்தது.	மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	எடுக்கப்பட வேண்டும்.
(ii)	இணக்கக்கூற்றின் பிரகாரம், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி அன்று அறவிடப்பட வேண்டிய தனிப்பட்ட மீதிகளின் மொத்த பெறுமதி ரூபா 240,005,072 ஆகும். இதில், திணைக்களத்தில் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய கடன் மீதியைத் தவிர, மீளாய்வு செய்யப்பட்ட	இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	நிலுவையில் உள்ள கடன் மீதியை இனம் கண்டு, விரைவில் அறவிட முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

	ஆண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 10,170,334 ஆகும்.		
(iii)	சிறைச்சாலை திணைக்களத்தின் அரச உத்தியோகத்தர்களின் முற்பண ‘‘பி” கணக்குத் தொடர்பாக 2023 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்தச் சரிபார்ப்பு கூற்றில், 3 வருடங்களுக்கும் மேலாக நிலுவையில் உள்ள, ஆனால் அறவிடப்பட வேண்டிய தரப்பினர் சரியாக அடையாளம் காணப்படாத ரூபா 401,153 கடன் மீதி நிதிக் கூற்று கணக்காய்வில் அடையாளம் காணப்பட்டது. கடந்த ஆண்டுகளில் அடையாளம் காணப்படாத, ஆனால் 5 வருடங்களைக் கடந்துவிட்ட ரூபா 11,004 மீதியும் 2024 ஆம் ஆண்டில் சிறைச்சாலை திணைக்களத்தின் அரச உத்தியோகத்தர்களின் முற்பண ‘‘பி” கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.	இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	நிலுவையில் உள்ள கடன் மீதியை இனம் கண்டு, விரைவில் அறவிட முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(த)	ஐக்கிய நாடுகள் சபையின் குறைந்தபட்ச நியமங்களின் அடிப்படையில் ஆண்/பெண் பாலினம், வயது, குற்றத்தின் தன்மை, சட்டத் தேவைகள் மற்றும் சிகிச்சைத் தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் கைதிகளை வகைப்படுத்தித் தனித்தனியாகத் தடுத்து வைத்தல் ஒரு அத்தியாவசியக் கோட்பாடாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், சிறைச்சாலை கட்டளைச்	இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.	அங்கீகரிக்கப்பட்ட சர்வதேசத் தரநிலைகளுக்கு இணங்கவும் சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தின் விதிகளுக்கு அமையவும் செயற்பட வேண்டும்.

	சட்டத்தின் 54 ஆம் பிரிவோடு தொடர்புடைய 1956 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களில் 177 மற்றும் 178 ஆம் பிரிவுகளின்படி, சிறைச்சாலையில் இடவசதிக்கு ஏற்ப ஒவ்வொரு வகை கைதிகளையும் தனித்தனியாகத் தடுத்து வைத்திருக்க வேண்டும் என்றபோதிலும், தற்போதுள்ள அதிக நெரிசல் காரணமாக 18 சிறைச்சாலை நிறுவனங்களில் அத்தகைய வகைப்பாடு இல்லாமல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.		
(ந)	2024 திசெம்பர் 31 ஆம் திகதியின்படி, 27 சிறைச்சாலை நிறுவனங்களில் சிறு தொகைக் அபராதத்தைச் செலுத்த முடியாமல் சிறையிலடைக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை 3,258 ஆகும் என்று தெரியவந்துள்ளதுடன், இந்த நிலை தற்போதுள்ள சிறைச்சாலை நெரிசலுக்கு ஒரு காரணமாக இருந்தது.	அவதானிப்புடன் உடன்படுகிறேன்.	பொருத்தமான பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ப)	நீதிமன்றங்களால் சிறையிலடைக்கப்பட்ட சந்தேக நபர்கள் தொடர்பாகப் பொலிஸாரால் சட்டப் பரிசோதனைத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் வழக்குப் பொருட்களுக்குரிய சட்டப் பரிசோதனை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக, 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று 20 சிறைச்சாலை நிறுவனங்களில் 9,560 சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.	அவதானிப்புடன் உடன்படுகிறேன்.	சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, சட்டப் பரிசோதனை அறிக்கைகளை விரைவில் பெற்றுக்கொள்வதன் மூலம் சந்தேக நபர்கள் தொடர்பான நடவடிக்கைகளை முறைப்படுத்த வேண்டும்.

(ம)	10 சிறைச்சாலை நிறுவனங்களில் மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை பரிசோதனை நிறைவு செய்யப்படாத மேன்முறையீடுகளின் எண்ணிக்கை 333 ஆகும்.	இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.	சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, மேன்முறையீடுகளை விரைவில் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
(ய)	பிணைப் பணத்தைச் செலுத்த முடியாத சந்தேக நபர்கள் சிறையிலடைக்கப்படுவமுடன், அந்தச் சந்தேக நபர்கள் பிணைப் பணத்தைச் செலுத்தி விடுதலை செய்வதற்கான உத்தரவைப் பெற்றவுடன் அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். ஆனால், 11 சிறைச்சாலை நிறுவனங்களில் 2024 ஆம் ஆண்டில் பிணைப் பணம் செலுத்தப்பட்ட நாளுக்கு அடுத்த நாளில் 9,091 சந்தர்ப்பங்களில் சந்தேக நபர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.	பிணை வழங்கப்பட்ட பிறகு நீண்ட காலம் தடுத்து வைப்பதில்லை என்றும், பிணை உத்தரவு வழங்கப்பட்ட பின்னர் நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே சம்பந்தப்பட்ட விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும், சில சமயங்களில் வெள்ளிக்கிழமை நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டால், அடுத்த திங்கட்கிழமைதான் விடுவிக்க வேண்டியிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	பிணைப் பணத்தைச் செலுத்தி விடுதலை செய்வதற்கான உத்தரவு கிடைத்த அன்றைய தினமே கைதிகளைச் சிறையிலிருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ர)	அபராதம் செலுத்த முடியாத குற்றவாளிகள் சிறையிலடைக்கப்படுவதுடன், அந்தக் கைதிகளின் அபராதத்தைச் செலுத்தி விடுதலை செய்வதற்கான உத்தரவு கிடைத்தவுடன் அவர்கள் தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். ஆனால், 17 சிறைச்சாலை நிறுவனங்களில் 2024 ஆம் ஆண்டில் விடுதலை செய்வதற்கான உத்தரவு கிடைத்த அன்றைய தினமே தண்டனையிலிருந்து விடுவிக்கப்படாத 2,278 சந்தர்ப்பங்கள் இருந்தன.	அபராதம் செலுத்திய பிறகு நீண்ட காலம் தடுத்து வைப்பதில்லை என்றும், அபராதம் செலுத்தி விடுதலை செய்வதற்கான உத்தரவு கிடைத்தவுடன் விடுவிக்கப்பட வேண்டும் என்றும், சில சமயங்களில் வெள்ளிக்கிழமை நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டால், அடுத்த திங்கட்கிழமைதான் விடுவிக்க வேண்டியிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	விடுதலை செய்வதற்கான உத்தரவு கிடைத்த உடனேயே கைதிகளைத் தண்டனையிலிருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ல)	21 சிறைச்சாலை நிறுவனங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் கைதிகளால் பிணை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய முடியாமை, பிணை வைக்க உறவினர்கள் முன்வராமை, பணம் இல்லாமை போன்ற காரணங்களால் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சிறையிலடைக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை 1,252 ஆக உள்ளதுடன், அவர்களில் பிணை வழங்கப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலாகச் சிறையிலிருப்பவர்கள் 55 பேர் ஆவர்.	பிணை வைக்க உறவினர்கள் முன்வராமை, பணம் இல்லாமை மற்றும் பிணை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய முடியாமை போன்ற காரணங்களே இதற்குக் காரணமாக அமைந்துள்ளன.	சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, பிணை நிபந்தனைகளைத் தளர்த்துவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(வ)	20 சிறைச்சாலை நிறுவனங்களில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று கைப்பற்றப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளின் எண்ணிக்கை 3,738, பேட்டரிகள் 3,229, சார்ஜர்கள் 524 மற்றும் சிம் அட்டைகள் 2,999 ஆக உள்ளதுடன், இந்தக் கருவிகள் சிறைச்சாலை கைதிகளின் கைகளுக்குச் செல்லாமல் இருக்க முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதும், கைதிகளின் கைகளுக்குச் செல்வதால் பல்வேறு சட்டவிரோதச் செயல்கள் நடைபெறுகின்றன என்பதும் தெரியவந்துள்ளது.	இந்தச் சட்டவிரோதச் செயல்களை உச்சபட்சமாகக் கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனபதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.	தடை செய்யப்பட்ட பொருட்கள் சிறைச்சாலை கைதிகளின் கைகளுக்குச் செல்லாமல் இருக்க முறையான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

(ழ)	அகுணகொலபெலஸ்ஸ பயிற்சிப் பாடசாலையில் 2024 ஜூன் முதல் நவம்பர் வரையான காலப்பகுதியில் நடத்தப்பட்ட 11 பயிற்சி அமர்வுகளில் கலந்துகொண்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை விட அதிக எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களுக்கு உணவு வழங்குவதற்காக ரூபா 203,495 மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ளது.	உள்ளகக் கணக்காய்வுப் பரிந்துரைகளுக்கு அமைய அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	பயிற்சி அமர்வுகளில் கலந்துகொள்ளும் உத்தியோகத்தரிகளுக்கு உணவு வழங்கும் போது முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை உருவாக்க வேண்டும்.
(ள)	சிறைச்சாலை திணைக்களத்தில் இயங்கி வரும் நலன்புரிக் சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் விற்பனை நிலையங்களில் சேவை செய்வதற்காகத் திணைக்கள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குச் சம்பளம், மேலதிக நேரம் மற்றும் பிற கொடுப்பனவுகள் வழங்கப்படுவதுடன், நீர் மற்றும் மின்சாரத்திற்கான செலவுகளையும் சிறைச்சாலை திணைக்களமே ஏற்கிறது. இதற்கு மேலதிகமாக, ஒவ்வொரு சிற்றுண்டிச்சாலைக்கும் கைதிகளின் உழைப்பும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், இந்த நலன்புரிக் சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் விற்பனை நிலையங்களை நடத்துவதன் மூலம் கிடைக்க வேண்டிய வாடகை வருமானம் இனம் காணப்பட்டு, அந்த வருமானத்தை நிதிப பிரமாணம் 83 இன் பிரகாரம் அரச வருமானத் தலைப்பு இலக்கம் 05 இற்கான வருமானக் குறியீடு இல. 20-02-01-01 இன் கீழ் குத்தகை வாடகை வருமானமாக அரச வருமானத்தில் வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட	சிறைச்சாலை நிறுவனங்களின் பாதுகாப்பைப் பேணுவதற்காகவும் மற்றும் வெளி நபர்களை ஈடுபடுத்துவதால் அதிக பணம் செலவாவதாலும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களே குறித்த பணிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.	நிதிப் பிரமாணம் 83 இன் பிரகாரம் செயற்பட வேண்டும்.

	வேண்டும் என்றபோதிலும், பூஸ்ஸ, மட்டக்களப்பு, தல்தென, வீரவில, வவுனியா, சிறைச்சாலை தலைமையகம் மற்றும் அவசரப் பதில் வியூகப் படைப்பிரிவு ஆகிய சிறைச்சாலை நிறுவனங்களில் உள்ள நலன்புரிக் சிற்றுண்டிச்சாலைகளில் இருந்து குத்தகை வாடகை வருமானம் அரச வருமானத்தில் வரவு வைக்கப்படவில்லை. இந்த நலன்புரிக் சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் விற்பனை நிலையங்களுக்கு 2024 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கான சம்பளம், மேலதிக நேரம் மற்றும் பிற கொடுப்பனவுகளாகச் சிறைச்சாலை திணைக்களம் ரூபா 12,944,077 செலுத்தியுள்ளது.		
(ற)	16 சிறைச்சாலை நிறுவனங்களில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி 239 துப்பாக்கிகள் செயலிழந்து காணப்பட்டதுடன், 9 சிறைச்சாலை நிறுவனங்களில் இருந்த 70 துப்பாக்கிகள், 51 மகசின்கள் மற்றும் 1,021 தோட்டாக்கள் விசாரணை நடவடிக்கைகளுக்காக நீதிமன்றங்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களிடம் ஒப்படைக்கப்பட்டு 02 முதல் 30 ஆண்டுகள் வரையிலான காலம் கடந்துவிட்ட போதிலும், 2025 ஏப்ரல் 28 ஆம் திகதி வரை முறையாக மீளப் பெறப்படவில்லை. துப்பாக்கிகள் செயலிழந்து காணப்படுவதாலும், பல்வேறு விசாரணைகளுக்காக நீதிமன்றங்கள் மற்றும் பொலிஸாரின் வசம்	தற்போதுள்ள துப்பாக்கிகளையும் பயன்படுத்திக் கையாள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.	துப்பாக்கிகளுக்காக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை உருவாக்க வேண்டும்.

	இருப்பதாலும், நிறுவனத்தின் நீதிமன்றக் கடமைகள், விசேட மருத்துவமனை கடமைகள், பாதுகாப்புக் கடமைகள் மற்றும் ஏதேனும் குழப்பமான சூழ்நிலையில் அவற்றைக் கட்டுப்படுத்துவதில் ஈடுபடும்போது சிறைச்சாலை அதிகாரிகளுக்குச் சிக்கல் நிலை ஏற்படக்கூடும்.		
(ன)	சிறைச்சாலை கைத்தொழில் மற்றும் விவசாய முற்பணக் கணக்கின் அரச துறைக்கு மேற்கொள்ளப்பட்ட விற்பனைகளுக்காகக் கிடைக்க வேண்டிய ரூபா 170,560,476 நிலுவைத் தொகையில், 20 வருடங்களுக்கும் மேலான ரூபா 3,000,924 மற்றும் 5 - 20 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 23,020,150 நிலுவைத் தொகையை நிதிப் பிரமாணம் 502(ஆ) இன் பிரகாரம் தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	குழுவொன்றின் மூலம் இது தொடர்பாகக் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.	நிதிப் பிரமாணம் 502(ஆ) இன் பிரகாரம் செயற்பட வேண்டும்.
(ஜ)	சிறைச்சாலை நிறுவனங்களினுள் பொருத்தப்பட்டுள்ள தொலைபேசி சமிக்ஞை தடை செய்யும் ஒழுங்கமைப்பு (Jammers) தொடர்பான பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.		
	(i) 2023 ஜூன் 09 ஆம் திகதி நடைபெற்ற அரச கணக்குகள் பற்றிய செயற்குழு கூட்டத்தில் வழங்கப்பட்ட உத்தரவின்படி, ”கைதிகளுக்குப் பாதுகாப்பையும் பராமரிப்பையும் வழங்கி அவர்களைப் புனர்வாழ்வு	2024 ஆம் ஆண்டின் நடவடிக்கைத் திட்டத்திற்காகச் சமிக்ஞை தடை செய்யும் அமைப்பை நிறுவுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. 2025 ஜூன் 11 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட 2025 நடவடிக்கைத்	அரச கணக்குகள் பற்றிய செயற்குழுவில் கலந்துரையாடி ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்களைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	அளித்துச் சமூகமயப்படுத்தும் செயல்முறை குறித்த விசேட கணக்காய்வு அறிக்கையின்” பரிந்துரைகளைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைத் திட்டத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட சிறைச்சாலை நிறுவனங்களுக்குத் தேவையான நவீன தொழில்நுட்பப் பாதுகாப்பு உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளும் திட்டத்தின் முன்மொழிவில் ஜாமர் கருவிகளை வாங்குவதற்காக நிதி ஒதுக்கீடு செய்ய முன்மொழியப்பட்டிருந்தது. அதன்படி, முதற்கட்டமாக 09 ஜாமர் கருவிகளை 2024 - 2025 ஆகிய 02 வருடங்களுக்குள் பெற்றுக் கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.	திட்டத்தின்படி, 15 சிறைச்சாலை நிறுவனங்களுக்காகச் சமிக்ஞை தடை செய்யும் அமைப்பை நிறுவ ரூபா 165 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி, சிறைச்சாலை நிறுவனங்களில் சமிக்ஞை தடை செய்யும் அமைப்பை நிறுவுவதற்காக, நிறுவனங்களின் பரப்பளவு பெறப்பட்டுப் பாதுகாப்புப் பரிசோதனை மையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அந்தப் பரப்பளவுகளின் அடிப்படையில் மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற்ற பிறகு அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.	
(ii)	ஜாமர் ஒழுங்கமைப்பு நிறுவப்பட்டுள்ள சிறைச்சாலை நிறுவனங்களில், அந்த அமைப்புகள் காரணமாக அலுவலகத்தின் அனைத்து வயர்லெஸ் தொலைபேசி அமைப்புகளும் செயலிழத்தல், இணைய வசதிகள் முறையாகச் செயல்படாமல் இருத்தல், சிறைச்சாலையைச் சுற்றியுள்ள அரச உத்தியோகத்தர்களின் குடியிருப்புகள், அரச / தனியார் நிறுவனங்கள்	தொலைபேசி சமிக்ஞை தடை செய்யும் ஒழுங்கமைப்பு நிறுவப்பட்டுள்ள நிறுவனங்களில் கைதிகளின் தொலைபேசிப் பயன்பாட்டைத் தடுப்பதே நோக்கமாக இருந்த போதிலும், கைதிகள் நடமாடும் இடங்களை இலக்கு வைத்திருந்தாலும், அதன் செயல்பாட்டின் காரணமாக அலுவலகங்களுக்குப் பயன்படுத்தப்படும் தொலைபேசிகள்	சிறைச்சாலைக்கு வெளியே உள்ள தொலைபேசி இணைப்புகள் செயலிழக்காதவாறு ஜாமர் ஒங்கமைப்பை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மற்றும் தனிப்பட்ட வீடுகளின் தொலைபேசி சமிக்ஞைகளுக்குத் தடை ஏற்படுதல் போன்ற சிக்கல்கள் எழுந்துள்ளன. இதற்காகப் பயன்படுத்தப்படும் ஜாமர் ஒழுங்கமைப்புகளைச் சிறைச்சாலையின் சுற்றுச் சுவருக்குள் கட்டுப்படுத்துமாறும், இடையூறுகள் உள்ள வளாகங்களை உள்ளடக்கும் வகையில் தொலைபேசி சமிக்ஞைகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் மற்றும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கருவிகளை அறிமுகப்படுத்தி இந்தக் குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதாகக் காணப்பட்டது.

செயலிழப்பதையும், பிற அத்தியாவசியப் பணிகள் நடைபெறும் அரச மற்றும் தனியார் துறைகளில் ஏற்படும் தாக்கத்தையும் தவிர்ப்பதற்காக, சமிக்ஞை ஒழுங்கமைப்புகளை நிறுவப் பொறுப்பேற்றுள்ள நிறுவனங்களுக்கு இந்த நிலைமை குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ) கைதிகளின் நிர்வாகப் பணிகளை மிகவும் முறைப்படியும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்காகவும், கைதிகளின் தகவல் முகாமைத்துவ அமைப்பை நிறுவிச் செயல்படுத்துவதும் சிறைச்சாலை திணைக்களத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாகும் என்பதால், 2013 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ அமைப்பிற்காக 2024 ஆம் ஆண்டு வரை ரூபா 200,514,577 செலவிடப்பட்டுள்ளதுடன், இது குறித்த பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i)	கைதிகள் தொடர்பான தகவல்களைத் திறமையாகவும் விளைப்பயனுள்ளதாகவும் முகாமைத்துவம் செய்வதற்காக நிறுவப்பட்டுள்ள இந்தச் சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ ஒழுங்கமைப்பை (PIMS) சிறைச்சாலை நிறுவனங்களில் செயல்படுத்தும் போது, முக்கியமாகச் சிறைக் கைதிப் பதிவு, கைதி மாற்றம், கைதித் தடுப்பு, ஒழுக்கம், தொழில், புனர்வாழ்வு, கைதிகளின் தனிப்பட்ட சொத்து முகாமைத்துவம், பார்வையாளர்களை அனுமதித்தல், பிரதான வாயில், உணவுப் பட்டியல் பிரிவு, மன்னிப்புப் புள்ளிப் பிரிவு மற்றும் மருத்துவப் பிரிவு உட்பட ஒவ்வொரு பிரிவிற்கும் தரவுகளை உள்ளிட வேண்டிய போதிலும், கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின்படி, சிறைக் கைதிப் பதிவு, கைதி மாற்றம் மற்றும் கைதித் தடுப்பு ஆகிய பிரிவுகளின் தரவுகளை உள்ளிடும் பணியை அனைத்துச் சிறைச்சாலை நிறுவனங்களும் செய்வதாக அவதானிக்கப்பட்டது. ஆனால், ஏனைய பிரிவுகளின் தரவுகள் முறையாகப் இற்றைப்படுத்தப்படவில்லை.	தகவல் தொழில்நுட்பப் பிரிவின் மூலம் சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ ஒழுங்கமைப்பைச் செயல்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதும், தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதும் செய்யப்படுகிறது. அதன்படி, அமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள உணவுப் பட்டியல், மேன்முறையீட்டுத் தகவல்களை உள்ளிடுதல் மற்றும் சுகாதாரத் தகவல்களை உள்ளிடுதல் ஆகிய பிரிவுகளைத் தவிர, ஏனைய அனைத்துப் பிரிவுகளையும் ஆரம்பிப்பதற்குத் தேவையான வசதிகள் (கணினிகள் மற்றும் அந்தந்தப் பிரிவுகளுக்கான உத்தியோகத்தர்கள் பயிற்சி) வழங்கப்பட்டுள்ளது.	சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ ஒழுங்கமைப்பை முறையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ii)	2023 ஜூன் 09 ஆம் திகதி நடைபெற்ற அரச கணக்குகள் பற்றிய செயற்குழுக் கூட்டத்திலும் உயிரியளவியல் தரவு அமைப்பு குறித்து வலியுறுத்தப்பட்டதுடன், அந்தக் கட்டளைகளைச் செயல்படுத்துவது தொடர்பான முன்னேற்றம், அதற்கான நடவடிக்கைத் திட்டம் மற்றும் கால அட்டவணை ஆகியவை 2023 ஒக்டோபர் 25 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் MOJ/AC/37/11-1/2023 கொண்ட கடிதத்தின் மூலம் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரால் அரச கணக்குகள் பற்றிய செயற்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2025 ஆம் ஆண்டில் ஒரு உயிரியளவியல் தரவு அமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய 150 உயிரியளவியல் ஸ்கேனிங் கருவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2023 - 2025 காலப்பகுதியில் உட்கட்டமைப்பு மற்றும் வன்பொருள் வசதிகளை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதன்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.	அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அதற்கு அங்கீகாரம் கிடைக்காததால், UNDP நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் நிறைவேற்ற ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது .	சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ அமைப்பை முறையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(iii)	இந்த ஒங்கமைப்பு தடையின்றித் திறமையாகச் செயல்படப் பயிற்சி பெற்ற மனிதவளம் தேவை என்ற	எதிர்காலத்தில் சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ ஒழுங்கமைப்பு மற்றும் திணைக்களத்தின் தகவல்	சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ ஒழுங்கமைப்பை முறையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட

	போதிலும், தகவல் ஒழுங்கமைப்பு நிறுவப்பட்டு சுமார் 12 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், 26 சிறைச்சாலை நிறுவனங்களில் உள்ள அதிகாரிகளுக்குப் போதுமான மற்றும் முறையான பயிற்சி வழங்கப்படவில்லை என்றும், வருடாந்த இடமாற்றங்களின்போது பயிற்சி பெற்ற அதிகாரிகளை இடமாற்றம் செய்வது குறித்து முறையான கவனம் செலுத்தப்படவில்லை என்றும் கண்டறியப்பட்டது.	தொழில்நுட்பப் பணிகளுக்காக தனியான சேவைப் பிரிவின் கீழ் அதிகாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பாக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது .	வேண்டும்.
(iv)	சிறைச்சாலை நிறுவனங்களில் பணிபுரியும் சிறைச்சாலை மேற்பார்வை அதிகாரிகள் இந்தச் சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ அமைப்புடன் தொடர்புடைய பணிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள போதிலும், அவர்களின் முக்கிய கடமைகளான நீதிமன்றம் தொடர்பான பணிகளுக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்பதால், தகவல் முகாமைத்துவ அமைப்புப் பணிகள் சரியாகப் இற்றைப்படுத்தப்படாமல் இருப்பதற்கு இது காரணமாகியுள்ளது என்றும், அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களைத் தவிர்த்து, 02 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அதிகாரி பதவிகளும் 39 தகவல் மற்றும் தொடர்பாடல்	இந்தத் திணைக்களத்திற்காக 02 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அதிகாரி பதவிகளையும் 39 தகவல் மற்றும் தொடர்பாடல் உதவியாளர் பதவிகளையும் அங்கீகரிப்பதற்காகச் சம்பந்தப்பட்ட படிவங்கள் நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த அமைச்சு அந்தத் தகவல்களை முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளது. புதிய பதவிகள் அங்கீகரிக்கப்பட்டவுடன் ஆட்சேர்ப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இதன் தேவை குறித்து முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின்	சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ ஒழுங்கமைப்பை முறையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளும் தேவை என்று அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்ட போதிலும், அந்தப் புதிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.	மேலதிகப் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்துரையாடலும் நடத்தப்பட்டுள்ளது.	
(v)	அதிகச் கிரயத்தில் தகவல் முகாமைத்துவ ஒழுங்மைப்பு நிறுவப்பட்ட போதிலும், ஜனாதிபதி மன்னிப்பு தொடர்பான மன்னிப்பைக் கணக்கிடுவது மற்றும் அது தொடர்பான அனைத்துப் பணிகளும் ஒவ்வொரு கைதிகளின் பதிவுகளையும் சரிபார்த்து கைமுறையாகவே (Manual) தயாரிக்கப்படுவதுடன், இதற்கு அதிக நேரம் எடுக்கும் என்றும், அரசியலமைப்பின் 34 ஆவது பிரிவின்படி ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, ஒவ்வொரு விசேட காரணங்களின் கீழும் தண்டனை அனுபவிக்கும் கைதிகளை விடுவிக்கும் போது, ஜனாதிபதி மன்னிப்புக்குத் தகுதியுள்ள கைதிகளைத் தேர்ந்தெடுப்பது மற்றும் அந்த மன்னிப்புக்குத் தகுதியுள்ள அனைத்துக் கைதிகளின் பெயர்ப் பட்டியல்களையும் ஜனாதிபதியின் கையொப்பத்திற்காகச்	தகவல் முகாமைத்துவ அமைப்பின் தேவைகள் மற்றும் விவரக்குறிப்புகள் சுமார் 2014 ஆம் ஆண்டிலேயே தயாரிக்கப்பட்டன. அப்போது, இந்த ஒழுங்கமைப்பு மூலம் சிறைக் கைதிப் பதிவை உள்ளிடுவது, அவர்களின் புனர்வாழ்வுத் திட்டங்கள், உணவுப் பட்டியல்கள், சிறைக் கைதிகள் தப்பி ஓடுதல் மற்றும் இடமாற்றங்கள், பாதுகாப்பிற்கான இடமாற்றங்கள், ஒழுக்கப் பிரிவுப் பணிகள், பார்வையாளர்களை அனுமதித்தல் மற்றும் உரிமம் வழங்கும் சபைக்குச் சமர்ப்பிப்புகளை முகாமைத்துவம் செய்வதுடன், நூலகப் பிரிவுப் பணிகள், வழக்குப் புதுப்பிப்புகள், தனிப்பட்ட சொத்துகளை உள்ளிடுதல், பிரதான வாயில் ஆவணப் பணிகள் மற்றும் மருத்துவப் பதிவுகள் தொடர்பான தகவல்களைச் சேமித்தல் போன்ற பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.	சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ ஒழுங்கமைப்பை முறையாகப் பேணுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

சமர்ப்பிக்காமல் இருப்பதாலும், இந்தக் ஜனாதிபதி மன்னிப்புச் செயல்முறைக்காக PIMS ஒழுங்கமைப்பில் ஒரு தொகுதியை அறிமுகப்படுத்தும் சாத்தியக்கூறு இருந்தும், அதற்காக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

சாதாரணக் கைதி ஒருவருக்கு நன்னடத்தை மற்றும் நல்ல நடத்தைக்கு வழங்கப்படும் புள்ளிகளின் அடிப்படையில் மட்டுமே மன்னிப்புடன் கூடிய விடுதலைத் திகதியை இந்த அமைப்பின் மூலம் தானாகவே பெற்றுக்கொள்ள முடியும். இந்த முறை கட்டளைச் சட்டத்தின்படி ஒவ்வொரு கைதியின் சலுகையாக இருப்பதால், அந்த வசதி PIMS இல் பொதுவானதாகக் கிடைக்கும் வகையில் தேவையான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் வழங்கப்படும் மன்னிப்புகள் காலத்திற்குக் காலம் மாறுபடுவதாலும், குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப அனைத்துக் கைதிகளுக்கும் இது கிடைக்காது என்பதாலும், PIMS ஒழுங்கமைப்பிற்கான தேவைகளை அடையாளம் காணும் போது இது சேர்க்கப்படவில்லை. அத்துடன், இது ஒரு சிக்கலான பணி என்பதால், அதைச் செயல்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்களும் உள்ளன.

5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சிறைச்சாலை திணைக்களத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 7,872 ஆக உள்ளதுடன், சேவையில் உள்ள உத்தியோகத்தரிகளின் உண்மையான எண்ணிக்கை 6,082 ஆகும். அதன்படி, ஒவ்வொரு 4 மட்டங்களிலும் 20 சதவீதத்திற்கும் அதிகமான வெற்றிடங்களுடன் திணைக்களம் செயற்படுகிறது.	முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 03/2020 இன் படி அனைத்து ஆட்சேர்ப்புக்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் , ஆரம்ப மட்ட வெற்றிடங்களுக்காகப் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர் பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்யக் கிடைத்த அங்கீகாரத்தின்படி, நேர்முகத் தேர்வு மற்றும் நடைமுறைப் பரீட்சைகளில் சித்தியடைந்த அதிகாரிகள் சாரதி, அலுவலக உதவியாளர், காவலர் மற்றும் தொழிலாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர். மேலதிக வெற்றிடங்களை நிரப்புவதற்காக, அரச சேவையின் ஆட்சேர்ப்புச் செயல்முறையை மீளாய்வு செய்வதற்காக அமைச்சரவையால் பிரதமரின் செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவிடம் சமர்ப்பிப்பதற்காக அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.	குறித்த பதவிகளின் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	அங்கீகரிக்கப்பட்ட பதவி நிலைப்பட்டியலில் ஒவ்வொரு பதவிகளிலும் 1,810 இற்கும் அதிகமான உத்தியோகத்தர்கள் வெற்றிடமாக இருப்பதால், வேலைப் பளுவும் வேலையில் திருப்தியின்மையும்	இந்தக் கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுபடுவதுடன், உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இந்த நிலைமையைத் தவிர்க்க நடவடிக்கை	குறித்த பதவிகளின் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	அவர்களின் செயலாற்றுகையிலும் நிறுவனத்தின் செயலாற்றுகையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.	எடுக்கப்படும்.	
(இ)	2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை, ஆட்சேர்ப்பு நடைமுறையில் உள்ளடக்கப்பட்டுள்ள 24 பதவிகள் தொடர்பான 77 முழுமையான ரீதியில் வெற்றிடங்களுக்கு அதிகாரிகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படவில்லை.	ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	குறித்த பதவிகளின் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	நாளாந்தம் சிறையிலடைக்கப்படும் கைதிகள் / சந்தேக நபர்களின் எண்ணிக்கை அதிகரிப்பால், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி அன்று அந்த எண்ணிக்கை 28,278 ஆக இருந்தது. அதன்படி, கைதிகளுடன் நேரடியாகத் தொடர்புடைய ஜெயிலர், புனர்வாழ்வு அதிகாரி, சார்ஜண்ட் மற்றும் காவலர் பதவிகளில் 1,376 வெற்றிடங்கள் இருந்தன. இது மொத்த அதிகாரிகளின் வெற்றிடங்களில் சுமார் 76 சதவீதம் ஆகும்.	ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	குறித்த பதவிகளின் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(உ)	2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை திணைக்களத்தின் உண்மையான பதவியணியினுள் 17 சிரேஷ்ட மருத்துவ அதிகாரிகள் மேலதிகமாக இருந்தனர்.	மருத்துவ அதிகாரி பதவிகளை 82 ஆக (புதிய பதவிகள் 42) அதிகரிப்பதற்காக நிதிப் பிரமாணம் 71 படிவங்கள் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.	பதவியணியைத் தற்போதைய தேவைக்கேற்பச் திருத்தி அங்கீகரிக்கப்பட வேண்டும்.
(ஊ)	சிறைச்சாலை நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான பதவியணியைப் பரீட்சிப்பு செய்த போது, 25	சிறைச்சாலை திணைக்களத்தின் 25 நிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அறிக்கையின்படி அதிகாரிகள் மேலதிகமாக	பதவியணியைத் தற்போதைய தேவைக்கேற்பச் திருத்தி அங்கீகரிக்கப்பட

	சிறைச்சாலை நிறுவனங்களில் உத்தியோகத்தர்கள் மேலதிகமாக இருந்தது. இதில் முக்கியமாகச் சிறைச்சாலைத் தலைமையகத்தில் 54 அதிகாரிகளும், மாத்தறை சிறைச்சாலையில் 24 அதிகாரிகளும், பூஸ்ஸ சிறைச்சாலையில் 20 அதிகாரிகளும் மேலதிகமாக இருந்தனர்.	இருப்பது அவதானிக்கப்பட்டாலும், தற்போது பயன்படுத்தப்படும் பதவியணி அறிக்கை 2013 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டது என்பதால், அது தற்போதைய உத்தியோகத்தர்களின் தேவைக்கும் கைதிகளின் எண்ணிக்கைக்கும் போதுமானதல்ல. அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அறிக்கையைத் திருத்துவது மிகவும் அவசியமானது. அது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.	வேண்டும்.
(எ)	சிறைச்சாலை திணைக்களத்தின் பதவிகளுக்கான பதவியணி 2013 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அது அந்தக் காலப் பகுதியில் திணைக்கள அதிகாரிகளின் தேவைக்கும் கைதிகளின் எண்ணிக்கைக்கும் போதுமானதாக இருந்தபோதிலும், நாளாந்தம் நீதிமன்றத்தால் சிறையிலடைக்கப்படும் கைதிகள் மற்றும் சந்தேக நபர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், அங்கீகரிக்கப்பட்ட பதவியணி போதுமானதல்ல. அது தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப பகுப்பாய்வு செய்யப்பட்டுத் திருத்தப்படவில்லை.		பதவியணியைத் தற்போதைய தேவைக்கேற்பச் திருத்தி அங்கீகரிக்கப்பட வேண்டும்.
(ஏ)	உதவிச் சிறைச்சாலை அத்தியட்சகர் (பெண்கள்), உதவிச் சிறைச்சாலை அத்தியட்சகர் புனர்வாழ்வு (பெண்கள்), ஆலோசக அதிகாரி மற்றும் ஒலி / ஒளி உதவியாளர் ஆகிய பதவிகளுக்காக 2025 மே 08 ஆம் திகதி வரை அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை இருக்கவில்லை.	உதவிச் சிறைச்சாலை அத்தியட்சகர் (பெண்கள்), உதவிச் சிறைச்சாலை அத்தியட்சகர் புனர்வாழ்வு (பெண்கள்) பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை வரைவு, நிறுவனப் பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரைகளைப் பெற்று விரைவில் அரச சேவைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	ஆட்சேர்ப்பு நடைமுறையைத் தயாரித்து முறையான வகையில் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

(ஐ)	சிறைச்சாலை திணைக்களத்தின் 18 பதவிகள் தொடர்பான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகள் அங்கீகரிக்கப்பட்டு 10 வருடங்கள் அல்லது அதற்கும் மேற்பட்ட காலம் கடந்துவிட்டதுடன், அவற்றில் 15 பதவிகள் தொடர்பான புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைகள் நிறுவனப் பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரையின் பேரில் அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், இதுவரை அரச சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதி கிடைக்கவில்லை.	இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	குறித்த நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளை விரைவில் அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஒ)	சிறைச்சாலை திணைக்களத்தின் தலைமை மற்றும் தலைமை அல்லாத பதவிகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றம் தொடர்பாகச் செயற்பட வேண்டிய முறையை உள்ளடக்கிய முறையான இடமாற்ற நடைமுறை தயாரிக்கப்படவில்லை.	தலைமை அதிகாரிகளுக்கான இடமாற்ற நடைமுறை குறித்து 2025 மே 26 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு அரச சேவைகள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. அதன்படி அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.	ஒரு முறையான இடமாற்ற நடைமுறையைத் தயாரிக்கப்பட வேண்டும்.
(ஓ)	சிறைச்சாலை திணைக்களத்தின் நிரந்தரப் பதவியான சாரதி ஒருவர் 2020 ஒக்தோபர் 22 ஆம் திகதி முதல் நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சுக்குத் தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ளார். அந்த உத்தியோகத்தருக்கு 2025 பெப்ரவரி மாதம் வரை சம்பளம், மேலதிக நேரம் மற்றும் சீருடைக் கொடுப்பனவுகளுக்காக சிறைச்சாலை திணைக்களம்	நீதி அமைச்சின் தேவைக்கேற்பவே குறித்த உத்தியோகத்தர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டதுடன், தற்போது அந்த உத்தியோகத்தர்களைத் திணைக்களத்திற்குத் திரும்பப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	அமைச்சுடன் கலந்துரையாடிச் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை மீண்டும் திணைக்களத்திற்குப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ரூபா 2,170,590 செலவிட்டுள்ளதுடன், அவர் மீண்டும் சிறைச்சாலை திணைக்களத்திற்கு விடுவிக்கப்படவில்லை. அத்துடன், அந்தச் செலவுகளை நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் மூலம் மீளப்பெறச் சிறைச்சாலை திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஔ)	சிறைச்சாலை நிறுவனங்களின் கைத்தொழில் பிரிவுகளில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி அன்று தொழில் ஆலோசகர், கைத்தொழில் நிர்வாகி, விவசாய ஆலோசகர், வேலை மேற்பார்வையாளர் மற்றும் மோட்டார் மெக்கானிக் போன்ற பதவிகளில் தற்போது 90 அதிகாரிகள் பணியாற்றி வந்த போதிலும், அந்த நிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அன்றைய தினத்தில் 217 ஆக இருந்ததால், 127 அதிகாரிகளின் பற்றாக்குறை காணப்பட்ட காரணத்தால் நிர்மாணம், கைத்தொழில், வேலைத் தளங்களின் வினைத்திறன், திட்டங்களின் விளைதிறன் என்பன தரம் குறைந்த மட்டத்தில் இருந்தன. மேற்கண்ட பதவிகளை வகிக்கும் அதிகாரிகளுக்குப் பதிலாக 41 சிறைச்சாலை காவலர், சார்ஜண்ட் மற்றும் தரம் II ஜெயிலர் பதவிகளில் உள்ள அதிகாரிகள் 12 சிறைச்சாலை நிறுவனங்களின் கைத்தொழில் பிரிவுகள் தொடர்பான கடமைகளில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளதுடன், இது	இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	பதவியணியைத் தற்போதைய தேவைக்கேற்பச் திருத்தி அங்கீகரித்து, முறையான வகையில் ஆட்சேர்ப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	தற்போதுள்ள உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை மேலும் அதிகரிக்கக் காரணமாகி உள்ளது. கைத்தொழில் பிரிவுக்குச் சம்பந்தப்பட்ட அந்த உத்தியோகத்தர்களை நீண்ட காலமாக ஆட்சேர்ப்புச் செய்யாததால், எதிர்காலத்தில் சிறைச்சாலை கைத்தொழில் பிரிவு செயலிழந்து, கைதிகளின் உழைப்பைப் பயன்படுத்த முடியாத ஒரு நிலைமையும், முறையான புனர்வாழ்வு வழங்கப்படாத நிலைமையும் ஏற்படும்.		
(க)	திணைக்களத்தின் 04 பதவிகளுக்கு மட்டுமே பொருந்தும் பயிற்சி வேலைத் திட்டங்களுக்கான வழிகாட்டல் பயன்படுத்தப்படுவதுடன், திணைக்களத்தின் 07 பதவிகளுக்கான பயிற்சி வேலைத் திட்டங்கள் தொடர்பான வழிகாட்டல்கள் பயன்படுத்தப்படவில்லை. மேலும், அந்த வழிகாட்டல்களை இற்றைப்படுத்தல் கடந்த 07 ஆண்டுகளில் செய்யப்படவில்லை என்பதுடன், அந்த அனைத்து வழிகாட்டல்களுக்கும் சட்டரீதியான அனுமதி இருக்கவில்லை.	குறித்த வழிகாட்டல்களைப் இற்றைப்படுத்திச் சரியாகச் செயற்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.	உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக முறையான வழிகாட்டலைத் தயாரித்து அங்கீகரிக்கப்பட வேண்டும்.
(ங)	கைதிகளை முகாமைத்துவம் செய்வதிலும் பிற முக்கிய நோக்கங்களை நிறைவேற்றுவதிலும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு துப்பாக்கிப் பயிற்சி அளிப்பது அத்தியாவசியமானது என்ற போதிலும், கைதிகளுடன் நேரடியாகத் தொடர்புடைய மற்றும் துப்பாக்கிப் பயிற்சி	இது தொடர்பாகக் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.	அதிகாரிகளுக்குத் தேவையான துப்பாக்கிப் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	பெற வேண்டிய 1,171 சிறைச்சாலை அதிகாரிகள் / அதிகாரினிகளுக்கு மட்டுமே 2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் துப்பாக்கிப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளதுடன், சுமார் 4,024 அதிகாரிகளுக்கு சம்பந்தப்பட்ட துப்பாக்கிப் பயிற்சி வழங்கப்படவில்லை.		
(ச)	சிறைச்சாலை திணைக்களத்தில் 2017 ஆம் ஆண்டு முதல் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில், தாபனக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தவறுகள் தொடர்பாக 142 ஒழுக்காற்று விசாரணைகளும், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுடன் தொடர்புடைய இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தவறுகள் தொடர்பாக 47 ஒழுக்காற்று விசாரணைகளும் நிலுவையில் இருந்தன.	இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.	தாபனக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தவறுகள் தொடர்பான ஒழுக்காற்று விசாரணைகளை நடத்துவதையும், துரிதப்படுத்துவதையும், ஒழுங்கு உத்தரவுகளை வழங்குவதையும் தாமதமின்றிச் செய்ய வேண்டும்.